சங்க நூற் கதைகள்

745

திரு. வித்துவான்

மு. இராசாக்கண்ணு அவர்கள் B. O. L.,

எழுதியவை

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவ சித்தாந்த [illegible] கழகம் லிமிடெட்,
திருநெல்வேலி சென்னை.

6834

ங்கநூற் கதைகள்

புலிசை மறைத்திரு. ஞானியாரடிகளின் மாணவர்

திருவாளர்

வான் மு. இராசாக்கண்ணு அவர்கள்

எழுதியவை.

திருநெல்வேலி தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,

திருநெல்வேலி. .... சென்னை. 1

பொருளடக்கம்

க. தாமப்பல் கண்ணனர் 1

உ. கரிகாலனும் சேரமானும் 9

ங. முடவரும் நாகரும் 18

ச. நெடுஞ்செழியனும் இரும்பொறையும்

1. வளம்பெருக்கிய மன்னன் 29
2. சேரன் பொறுமை 34
3. பாண்டியன் வஞ்சினம் 40
4. அறத்தின் வெற்றி 45

ரு. கற்புடைய மங்கை

1. தலைவன் பிரிவு 50
2. நடத்தையின் பயன் 51
3. சாதுவன் துயர் 57
4. கற்பின் வெற்றி 60
5. தாய்மொழி அன்பு 63
6. ஆதிரை மகிழ்ச்சி 75

சங்கநூற் கதைகள்

க. தாமப்பல் கண்ணனார்

தொண்டைநாட்டில் சிறந்த ஊர்கள் பல உண்டு. காஞ்சிபுரம் அவற்றுள் புகழ்வாய்ந்தது. பழையகாலத்தில், காஞ்சிபுரம் தலைநகரமாகவும் விளங்கியிருந்தது.

காஞ்சியை அடுத்துப் பல ஊர்கள் விளங்கின. அவற்றுள், தாமல் (அல்லது) தாமப்பல் என்பதும் ஒன்று. அவ்வூரில் அறிவு மிக்க புலவர் ஒருவர் வாழ்ந்துவந்தார். அவருடைய இயற்பெயர் கண்ணனார். தாமப்பல் என்ற அவர் ஊருடன் அவர் பெயரையுங் கூட்டித் 'தாமப்பல் கண்ணனார்' என்று அவரை எல்லோரும் அழைத்தனர்.

தாமப்பல் கண்ணனார், கல்வியில் கடலை ஒத்தவர். தமிழ்நூல்களை எல்லாம் நன்றாகப் படித்துப் பயின்றவர். அடக்கம் என்ற குணத்தில் சிறந்து விளங்கியவர். தம் கண் முதலிய ஐம்பொறிகளை அவற்றின் விருப்பப்படி விடாமல் தம் விருப்பப்படி அடக்கி அருளாளராக விளங்கிநின்றார். எல்லா உயிர்களையும்

சமமாக நோக்கி, எவ்வுயிர்க்கு எத்துன்பம் வந்தாலும் அத்துன்பம் தமக்கு வந்ததாக எண்ணித் துடிக்கும் நெஞ்சம் பெற்றவர். முடி தரித்து உலகத்தினை ஆளும் மன்னனாயினும், குற்றம் செய்யின் அஞ்சாது எடுத்துக்கூறும் ஆண்மைக் குணத்தினர். இவருடைய அறிவின் ஆழமும், நல்லியல்புகளும் நாடெங்கும் பரவின.

அக்காலத்தில் சோழநாட்டைச் சோழன் நலங்கிள்ளி என்பவன் ஆண்டுவந்தான். இவன் கவிபாடும் செந்தமிழ்ப் புலவன். பாண்டி மன்னனோடு பகைத்துப் போரிட்டு அவனை வென்று அடக்கியவன்.

இவ்வீரனுக்குப் பின் பிறந்தோன் மாவளத்தான் என்போன். மாவளத்தானும் தன் முன்னவனைப்போலவே ஆற்றல் நிறைந்தவன். தமிழ்ப்புலமை நிறைந்த நலங்கிள்ளி போர்க்களத்தையே அவாவினான். ஆனால், அவன் தம்பியாகிய மாவளத்தானோ சிறந்த கல்விக் களத்திலேயே கருத்தைச் செலுத்தினான். மேலும்மேலும் அறிவைப் பெருக்க விரும்பினான். அதனால், தமிழறிஞருடன் உரையாடுவதை ஓர் உயர்வாக எண்ணினான். தமிழைப் படித்தல் அமிழ்தை உண்ணுதற்குச் சமம் என உறுதிகொண்டான். ‘தமிழமுது,

தன்னை உண்டாரை வாழவைக்கும்,' என்றார் பாரதியார். ஆதலால், தன்னுடனிருந்து தனக்குத் தமிழுணவை ஊட்டவல்ல தமிழறிஞரை அவன் தேடினன். கண்ணனரைப் பற்றிக் கேள்விப்பட்டான். அவரைத் தன்னுடன் இருக்கும்வண்ணம் கேட்டுக்கொள்ள விழைந்தான். ஒருகால் புலவர்பெருமானுக்குத் தன் கருத்தை அறிவித்தான். புலவரும் அதனை அன்போடு ஏற்றுக்கொண்டு, சோழ நாடு அடைந்தார். புலவரும் புரவலரும் பொருந்திய தமிழ்நேயம் உடையராயினர்.

பொழுது புலர்வதற்கு ஐந்து நாழிகை இருக்கும் அளவில் அரசரும் புலவரும் கண் விழித்தெழுவர். காலையில் உரிய கடன்களை முடித்துக்கொள்வர். கற்றற்கிடமாய தமிழ் மன்றம் சார்வர். அங்கே அழகிய நூல் நிலையம் விளங்கிக்கொண்டிருக்கும். அதன்கண் பல ஓலைநூற்கட்டுகள் அடுக்கடுக்காக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். இலக்கணச் சுவடிகள் ஒருபுறம்; இலக்கியச் சுவடிகள் ஒருபுறம்; அறிவியற்கலைகளை அறிவிக்கும் சுவடிகள் ஒருபுறம்; இவ்வாறு இன்னும் பல வகையாகவும் அறிவைப் பெருக்கும் நூல்கள் மிகுந்து விளங்கும். புலவர், பல சுவடிகளிலிருந்து பல கருத்துக்களைக் கூறுவார். அரசன்

கேட்டு அறிந்துகொள்வான். அறியுந் தோறும், 'இவற்றை முன் தெரிந்துகொள்ளா திருந்தேனே' என எண்ணுவான். இப்போது இப்புலவரால் அறிந்துகொள்ள நேர்ந்தது ஒரு பெரும் பேறு என்று கருதி மகிழ்வான். கேட்டவற்றைப் பலகாலும் நினைப்பான். தோன்றும் ஐயங்களைப் புலவர்பால் கூறுவான். ஏழைகள் செல்வர்களிடம் ஏங்கி நிற்பது போலக், கருத்துக்களை எதிர்பார்த்து நிற்பான். அவர் அன்போடு அவன் ஐயங்களைப் போக்கு வார். இங்ஙனம் பல நாட்கள் கழியும். மன்ன னுக்கும் அறிவு பெருகியது.

பொழுதுபோக்குக்காக ஓரொரு நாளில் அரசனும் புலவரும் வட்டாடுதல் வழக்கம். வட்டு என்பது சொக்கட்டான் போல்வதோர் ஆட்டம். கவறுடல் பல துன்பங்களைத் தரு மன்றே! ஒருநாள் இருவரும் தமிழ்ச்சொல் லாடி மகிழ்ந்த பின்னர் வட்டாட விரும்பினர். வேலைக்காரர்கள் அறை கீறப்பட்ட பொற் பலகையையும், நன்மணிகள் இழைக்கப்பெற்ற காய்களையும் கொண்டுவந்து வைத்தனர். இரு வரும் எதிர் எதிர் இருந்து ஆடினர்.

வெற்றியும் தோல்வியும் ஒருவருக்கே எப் போதும் இருக்கமாட்டா. ஒருகால் வெல்வோர் மற்றொருகால் தோல்வியும் அடைவர். சூதாட்

டத்தின் இயல்பு இது. சில நாழிகைவரையில் இருவரும் சமமாக ஆடினர். போகப்போக வெற்றி மன்னனுடைய தாயது; தோல்வி புலவருடையது எனத் துணிந்து கூறும் நிலைமை உண்டாயிற்று. ஆதலின், புலவர் விளையாட்டாக ஒரு சூழ்ச்சி செய்தார். ஆடுதற்கென அமைந்த கவறு (காய்) ஒன்றினை மறைத்தார். கண்ணையும்



'வட்டினை எடுத்துப் புலவர்மேல் எறிதல்'

கருத்தையும் ஆட்டத்திலேயே செலுத்தியிருந்த மன்னன் அதனைக் காணுதிருப்பானே? சினம் எழுந்தது; தன் பொறுமைக்குணத்தை அறவே மறந்தான். சிறிதும் எண்ணிப்பாராது, வட்டினை எடுத்துச் சட்டெனப் புலவர்மேல் எறிந்தான்.

கவறு புலவரை வன்மையாகத் தாக்கியது. "சோழமன்னனே! மாவளத்தானே! நின் குலப்பெருமையை மறந்தனையே! வலிய பருந்துக்கு அஞ்சி, முன் 'அரசே! தஞ்சம்', என்று அடைந்தது ஒரு புறா. அதற்காகத் தன் இன்னுயிரையும் ஈயத் துணிந்து துலை புக்கனன் சிபி எனும் பெரியோன். அவன் வழி வந்த ஆண்டகையே! பகைவரை அழித்த வீரம் செறிந்த நலங்கிள்ளிக்குப் பின்னவனே! வில்வீரர்க்குத் தலைவனே! இரப்போர்க்கு ஈயும் வள்ளலே! நினக்குச் சின மாகாது. நின்பால் சினத்தை யான் காண்கின்றேன். ஆதலால், நின் பிறப்பில் எனக்கு ஐயம் உண்டாகின்றது," எனப் புலவர் உடனே இடித்துக்கூறினர்.

மாணவர்களே! புலவர் உள்ளத்தின் வன்மையைப் பாருங்கள்! மண்ணாளும் மன்னன் மாவளத்தான்! ஆயினும், மன்னனுக்கு அஞ்சுகின்றாரா? இல்லையே! 'நின் பிறப்பில் எனக்கு ஐயம் உண்டாகின்றது!' என, எவ்வளவு வன்மையான சொல்லைக் கூறுகின்றார். அரசனுக்கு உண்மை அறிவு வரச் செய்வதையே தம் கடமையாகப் புலவர் கருதுகின்றார். தவறு செய்யின், யாவராயினும் அவரைக் கண்டித்து உறுதியுரைகளைக் கூறுவோரே பெரியோர். அவர், தம் உயிர்க்குக் கேடுவரினும் அஞ்சாது

நன்மையையும் நலத்தையும் தரும் சொற்களையே சொல்லுவார்கள்.

மன்னன் உள்ளத்தைக் கவர்ந்தோங்கிய சினம் உடனே ஆறியது. அரசன் அறிவு விளக்கம் பெற்றான். நடந்தவற்றை எண்ணினான். "ஐயோ! என்ன செயல் செய்தேன்! சினம் என்னை விழுங்கிவிட்டதே! என்னையே இழந்துவிட்டேனே! என்னே என் இழிவு! கடவுளரும் அஞ்சும் தமிழ் நாவலரின் பெருமையை எண்ணாது வட்டுக்கொண்டு எறிந்தேனே!" எனப் பலவாறாக எண்ணி மனம் வருந்தினான். புலவரை நோக்கவும் அஞ்சினான். தலை சாய்த்து, நாணி வாய்மூடி இருந்தான்.

மன்னவன் மனம் பட்ட பாட்டினைப் புலவரும் அறிந்தார். அவர் மனம் இளகிற்று. ஆதலால், அரசனை நோக்கி, "அருமை அரசே! முதலில் விளையாட்டாகக் கவறு மறைத்தவன் யானே. அதனை 'விளையாட்டு' எனக் கருதாது, தவறிழைத்தேன் எனத் தவறாக எண்ணி வட்டினை என்மேல் வீசினை. பின் யான் இடித்துக் கூறிய சுடு சொற்களுக்காக மிக்க துன்பத்தை அடைகின்றனை. நா நீட்டிப் பேசிய என் சொற்களுக் கடங்கிப் பெருந்தன்மை

நிறைந்து விளங்குகின்றனே. சோழ குலத்திற்கே, தம்மைப் பிழைத்தோரைப் பொறுக்கும் குணச் சிறப்புண்டு. நின் பெருமை சிறக்க! நின் வாழ் நாள் காவிரி ஆற்று மணலினும் பலவாகி இனிது வாழ்வாயாக,'' என்று கூறி வாழ்த் தினர்.

நீர் கிழிய எய்த வடுப்போலச் சான்றோர் இருவர் கலக்கமும் மாறி மறைந்தது. இரு வரும் மீண்டும் தமிழ்ச்சுவையை இடைவிடாது நுகர்ந்து மகிழ்வாராயினர்.

மாணவர்களே! சூதாட்டத்தினும் கொடியதொன்றில்லை. இதனை ஆடுவோர் யாவராயினும் அவர் தம் பெருமையை இழப்பர் என்பது உறுதி. சூதாடியதனல், முடிவேந் தனும் தவறினன்; புலவரும் தம் உயர் நிலைமையை இழந்து முதலில் அவன் சினத் துக்கு இரையாக நேர்ந்தது. இருவருக்கும் மனக்கலக்கம் உண்டாயிற்று. ஆதலால், இக் கொடிய ஆட்டம் அனைவராலும் கடியத்தக்க தாகும்.

"சூது விரும்பேல்" — ஔவை

உ. கரிகாலனும் சேரமானும்

கரிகாலன் என்பவன் தலைசிறந்த சோழ நாட்டு மன்னன். இவன் இளமையில் மிகுந்த அல்லலை அடைந்தான். தொல்லைகளால் துயருற்றான். ஆனால், முயற்சியை இழக்கவில்லை. மேலும்மேலும் முயற்சியைக் கைக்கொண்டு முன்னேற்றம் அடைந்தான். சிறையிலிட்டுப் பெருந்தீக்கொண்டு இவனைக் கொல்லுதற்கு இவன் பங்காளிகள் சூழ்ச்சி செய்தனர். அத் துன்பமும் இவனை நெருங்கவில்லை.

வயது நிரம்பிக் கட்டிளைஞனான இவனுக்கு ஓர் ஆவல் உண்டாயிற்று. அஃதாவது, தண் தமிழ் நாடேயன்றி, வடநாட்டையும் தன் ஒரு குடைக்கீழ்க் கொண்டுவருதல் என்பது. அதற் கேற்பத் தன் படையினை இவன் ஒழுங்குபடுத் திக்கொண்டான். வில்வீரர், வாள்வீரர், புரவி வீரர், தேர்வீரர் என்னும் பல திறத்தவர் வீர ஒலி செய்யப் படை புறப்பட்டது.

படை, பாண்டிநாட்டை நோக்கிச் சென்றது. பாண்டி நாடு பணிந்தது.

பாண்டிநாட்டுக்கு மேற்கில் சேர நாடு அமைந்திருந்தது. சோழன் சேர நாட்டின் மேற் சென்றான். அந்நாட்டினை, அப்போது அரசுபுரிந்தவன் சேரமான் பெருஞ்சேரலாதன்

என்பவன். அவனும் கரிகாலனைப்போல் வீரம் நிறைந்தவன். தன் நாடு பிறருக்கு அடிமைப் படலாகாது என்று எண்ணும் இயல்பு வாய்ந் தவன்.

சோழர் முன்னணிப்படை சேரநாட்டு எல்லையை அடைந்தது. இதனைச் சேரமான் அறிந்தான். அவன் கண்ணில் நெருப்புப் பொறி பறந்தது. மீசை படபட எனத் துடித் தது. "என்ன எண்ணங்கொண்டான் இச் சோழன்! இவனினும் யான் தாழ்ந்தவனோ! தனக்கு அரசநிலை கிடைத்தால், பிறநாட்டு அரசரது தகுதியைக் கெடுக்க வேண்டுமா? இவன் நாடுதான் உரிமையோடு வாழவேண் டுமா? என் நாட்டினர் அடிமைகளாகத் தொண்டுசெய்ய வேண்டும் என்பது இவன் எண்ணம்போலும்! யான் உயிருடன் வாழும் வரை, இவன் எண்ணம் ஈடேறாது," என்று கூறினான்.

பின்பு அரசவையி லிருந்த யாவரையும் மன்னன் பார்த்தனன். அங்கிருந்த சேனைத் தலைவனை அவன் கண்கள் தேடின. அவனை விளித்து, "சேனைத் தலைவ! படைகள் அணிவகுக்கப்படட்டும். சோழர்படை நமது நாட்டுள் புகுந்து மக்களுக்குத் தொல்லையை விளைக்குமுன் நாம் முன்னேறிச் சண்டை இடு

வோம். இன்று யானே தலைவனாக இருப்பேன்,'' என்று கூறினான்.

போர்ப்பறைகள் முழங்கின; கேடகங்கள் ஒன்றோடொன்று பட்டுப் பேரொலி எழுந்தது. ஈட்டிகள் உரைசி எங்கும் ஒலிபரந்தது. குதிரைகள் கனைத்துக் கிளர்ச்சி உற்றன. யானைகள் பிளிறி எழுச்சியுற்றன. வீரர்கள் கடலலைபோல ஆரவாரித் தெழுந்தனர்.

சேரன், தானே தலைவனாய்ப் படையினை நடத்திக்கொண்டு வருகின்றான் என்பதைச் சோழன் அறிந்தான். 'யானும் படைத்தலைமை ஏற்பேன்,' எனத் தன் தலைமையின் கீழ்ப் படையினை நடத்தலுற்றான்.

முடிதரித்த இருவேந்தர்களையும் தலைவர்களாகக் கொண்டன கடலை ஒத்த படைகள். வெண்ணிப்பறந்தலை என்னுமிடத்தில் எதிருற்றன. வாள்வீரர், வாளினை வீசி எதிர்ப்பட்டோரைக் கொன்றனர். எதிரிருப்போர், பகைவர் வாள்வீச்சுத் தம்மேற் படாதிருக்குமாறு தம் உடல் முழுவதுங் கேடகத்தால் மறைத்துக் கொண்டு போரிட்டனர். வில்வீரர் தம் குறி பிழையாவண்ணம் அம்பெய்தனர். ஈட்டியாளர் தம் பகைவருடலில் தம் படையை மாட்டினர். இங்ஙனம் இரு திறத்தினரும் தம் ஆற்றலைக் காட்டிப் போரிட்டனர். செந்நிறக் குருதி

மண்ணில் படிந்தது. மண் தன் நிறத்தை இழந்து செந்நிற மாயிற்று. முதலில் சிற்றருவி யாய் ஓடிய குருதி பின்னர்ப் பேர் ஆருய்ப் பெருகியது.

சேரமான் படை, சோழர் வன்மையை எதிர்த்துநிற்கும் ஆற்றல் அற்றுச் சிறிது பின் வாங்கத் தொடங்கியது. சேரன், "இப்போழ்து என் வீரரை, யான் இப்படியே விட்டுவிடின் பின்னர் இவர்கள் ஓடுவர். ஆதலின், இப்போதே இவருக்குத் தக்க உணர்ச்சியை உண்டாக்க வேண்டும்," என்று எண்ணினன். முன்னர், படையின் பல இடங்களிலிருந்து ஆங்காங்குக் கட்டளைகள் பிறப்பித்துக் கொண்டிருந்தனன். இப்போது அதனை விடுத்துச் சேனையின் முன் அணிக்கே வந்தனன்.

"சேர வீரர்களே! சேரவாரீர். மலைநாட்டு மக்களே! நாம் உயிருடன் வாழும்போதே, நம் மலைமங்கையின் மானம் எனும் அணி கவரப் படல் அழகிதோ? மானம் உயிரினும் சிறந்தது. வீரம் நம் செல்வம். செல்வத்தைச் செலவிட்டு மானத்தைக் காப்பாற்றல் வேண்டும். உயிர் ஒரு பொருட்டன்று," என வீரங் கிளர்ந்தெழப் பேசினன்.

பின்வாங்கிய சேரர் நின்றனர். எதிர்ப் புணர்ச்சிகொண்டு காலை முன்னேக்கி வைத்

தனர். சோழரை எதிர்த்தனர். காரணம் யாது? சேரமான் சொற்கள், வீரர் செவி வழிச் சென்றன. உள்ளத்திற் சோர்ந்துகிடந்த வீரம் எனும் பசும்பயிர்க்கு அச்சொற்கள் நல்ல நீருணவு ஆயின. வீரப்பயிர் மயக்கம் தெளிந்தது; தலை நிமிர்ந்தது. விளக்கம் உற்றது.

புத்துணர்ச்சியுடன் போரிடும் சேருக்குச் சோழர் உடைகின்றனர். 'மலைபோல் வரும் மலைநாட்டு வீரரை அசைத்தலும் தம்மால் ஆகாது போலும்!' என அஞ்சுகின்றனர். 'தக்ககாலம் இதுவே' என்றுணர்கின்றான் சேரன். முன்னணியில் பல இடங்களில் நின்று உணர்ச்சியை உண்டாக்கும் சொற்களைக் கூறுகின்றான். சேரன் முயற்சி அவ்வளவில் நின்றுவிடவில்லை. தானும் போர்வீரனைப்போல் படையைத் தாங்கிப் போரிடுகின்றான். சோழ வீரர் நலிகின்றனர். எதிரேறும் வன்மையை இழக்கின்றனர், பின் வாங்குகின்றனர்.

கரிகாலன், தன் படை பின்னடைவதை அறிந்தான். சில நாழிகைக்குள் சேரன் முழுத் தோல்வியை அடைவான் என்று இவன் முன்பு எதிர்பார்த்தான். நிலைமை வேறாயிற்று. காரணம் யாது எனக் கருதினான். சேரர்படையினை ஊன்றிக் கவனித்தான். சேரமானைப் படைத்

தலைப்பில் கண்டான். அவன் ஆற்றும் பெருஞ் செயலை அறிந்தான். போர் அப்போது நடக்கும் முறையிலேயே விடப்பட்டால், வெற்றி சேரனைப் பற்றும் எனத் துணிந்தான். தான் வெற்றி பெற முயன்றான்.

"சேரர்தலைவ னில்லையேல், சேரர் தோல்வியுறுதல் உறுதி. அவருக்கு உணர்ச்சி ஊற்றாக இருப்பவன் சேரமானே. அவன் வீழ்த்தப்படுவானானால் போரும் முடிவுபெறும்," என்று நினைத்துத் தானும் சேனையின் முன்னிடத்தை அடைந்தான்.

தன் கை வில்லிலிருந்து பல அம்புகளைச் சேரமானைக் குறியாக வைத்து எய்தான். சேரமானும் அவ்வம்புகளைத் தன் கேடகத்தில் தாங்கித் தானும் அம்புகளை எய்தான். இருவரும் வெற்றி தோல்வி இல்லாமல் சண்டை இட்டனர். ஒருவரை நோக்கி ஒருவர் நெருங்கினர். விற்சண்டை வேண்டாம் என விடுத்தனர். வேற்சண்டையைக் கைக்கொண்டனர். ஒருவரை ஒருவர் கொல்லுதற்கு இடம் பார்த்தார்கள். கரிகாற் பெருவளத்தான் 'எப்போது சிறிது இடைவெளி கிடைக்கும்; கைக்கேடகம் சிறிது இடம் தரினும் போதும்,' என்னும் ஒரே குறிப்புடன் இருந்தான். 'இனிக் காலம் தாழ்க்கலாகாது,' எனச் சேரன்

‘வேல் சேரமானின் முதுகிற் பாய்ந்தது’

மார்பினையே குறியாக வைத்துத் தன் கூரிய வேற்படையை எறிந்தான். அப்படைக் குத்தினை விரைந்து கேடகத்தில் ஏற்கச் சேரமான் முற்பட்டான். ஆனால், அவன் கால்கள் இரத்தப் பசையால் சிறிது சறுக்க, ஒரு புறமாகச் சாய்ந்தனன். இதனைச் சோழன் கண்டான். தன் நிலை தவறும் ஒருவன்மேல் படை எறிதல் தக்கதன்று. இதனை உணர்ந்தவன் அரசன் கரிகாலன்! ஆனால், அவன் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. வேல், அவன் கையினின்றும் எழுந்துவிட்டது. நொடிப்பொழுதில் சேரமானுடைய முதுகில் அது ஒரு பக்க

மாகப் பாய்ந்தது. இருபுறத்து வீரரும், 'ஆ' என்று அலறினர்.

வீரம் செறிந்த சேரமான் முதுகில் புண் உண்டாய் விட்டது! வீரர் புறப்புண்ணைக்கண்டு வெட்கப்படுவர். மார்பில் படும் புண்ணையே செல்வம் எனப் போற்றும் சீரியோருக்கு, முதுகுப் புண் எவ்வளவு துன்பத்தை உண்டாக்கும்! ஆதலால், பகைவரும் நண்பரும் மனம் வருந்தினர். 'இவன் முதுகில் நம் வேல் பட்டதே! என்னே நம் வீரம்!' எனக் கரிகாலனும் மனம் கருகினன்.

கால் சறுக்கிச் சாய்ந்த சேரமான் முதுகில் வேற்படை பட்ட அளவில், குருதி பீரிட்டுக் கொண்டு வெளிவந்தது. ஆயினும், அவன் உயிர் போகவில்லை. சேரமான் நடந்ததை உணர்ந்தான்; மனம் உடைந்தான். வேல் பாய்தலால் உண்டாகிய புண்ணின் வழியே வெளிவந்த செந்நீரினும், கண்ணீர் மிகப் பெருகிற்று; ஏன்? 'மானம் உயிரினும் சிறந்தது', எனத் தன் வீரர்களுக்கு அவன் கூறவில்லையா? அவனுக்கும் அவ்வுணர்ச்சி இருக்குமன்றோ? "ஐயோ! முதுகில் பாய்ந்த வேல், என் உயிரைக் கொல்லாது என்னை இந்நிலையில் விடுத்ததே," என்று எண்ணி ஏங்கினன். "நடந்ததைப்பற்றி வருந்துவானேன்? வேல்

போக்காத உயிரை யான் போக்குவேன்,'' என்ற முடிவிற்கு வந்தான். வீரர்க்கு உயிரினும் விழுமியது வீரம் ஒன்றே.

போர்க்களத்தை விடுத்தான். ஆறிடு மணல்மேடொன்றைத் தேர்ந்துகொண்டான். அங்கே சென்ருன். வடதிசை நோக்கி அமர்ந்து, உணவை ஒழித்து ஆண்டவனை எண்ணி இருந்தான். நாள் பல ஆயின. உண வின்மையால் உரம் குறைந்தது; உடல் நலிந் தது; உயிர் பிரிந்தது.

மாணவர்களே! நீங்கள், வீரத்துடன் போர்புரிந்த கரிகாலனைப் புகழ்வீர்களா? கால் தவறுதலால் நேர்ந்த புறப்புண்ணும் ஆகாது என நாணி உயிர்விடுத்த சேரமானைப் புகழ்வீர் களா? மானமும் வீரமும் வாய்ந்த இவர்கள் இருவரும் நம் மூதாதையர்கள் என எண்ணும் போது, நமக்கு இந்நிலை எவ்வளவு உருக்கந் தருகின்றது.

> "மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னர்
> உயிர் நீப்பர் மானம் வரின்." —குறள்.

---

௩. முடவரும் நாகரும்

நாம் வாழும் நிலப்பகுதிக்குத் 'தமிழகம்' என்று பெயர். தமிழகம் என்பது தமிழ்மொழி பேசப்படும் இடமாகும். இங்கே வாழ்வோர் தமிழ்மக்களாவர். முற்காலத்திருந்த—ஏறக் குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் னிருந்த—தமிழகத்தை இப்போது நாம் காண் கின்றோமில்லை. அக்காலத்தில் முடிதரித்த மன்னர் மூவர் வாழ்ந்திருந்தனர். அவர் சேர, சோழ, பாண்டியர் எனப்படுவார். இம் மூவரின் ஆட்சிக்கும் உட்பட்டு விளங்கிய இடமே தமிழகம் எனச் சிறந்திருந்தது.

ஒரு காலத்தில் சேரமன்னன் மிக்க வன்மை யுடையவனும் விளங்குவான். அப்போது அவன் ஆட்சியின்கீழ் மற்ற மன்னர் இருவரும் அடங்கி நடப்பார்கள். அவ்வாறே, சோழன் படைத்தகுதிகளால் வலுப்பெறின், மற்றவர் அவனுக்கு அடங்கிக்கிடப்பர். பாண்டியனும் அவ்வுயர் நிலையை அடைதல் உண்டு.

அக்காலத்தில், ஐயூர் முடவனார் என் னும் தமிழறிவு சான்ற புலவர் ஒருவர் இருந் தார். அவர் பெயரை நோக்கியே அவர் உடல் முடம்பட்டிருந்தது என அறியலாம். ஆனால், அவர் நிறைந்த அறிவினர். அறிவு

முடம் அவருக்கு இல்லை. உடல் அழகுமட்டும் அழகாகாது. எட்டிப்பழம் பார்ப்பதற்கு அழகாக இருக்கின்றது. உண்போர்க்கோ கசந்து தோன்றும். அழகான உருவத்தை மட்டும் ஒருவர் பெற்றிருப்பதனால் பயனில்லை. 'கல்வி அழகே அழகு. அவ்வழகினைப் பெற்ற உடல் எவ்வாறு இருப்பினும் பெருமை அடையும். ஆதலின், கல்வியால் சிறந்து விளங்கிய முடவனாரை யாவரும் மதித்தனர்.

முடவனார், கொடைமடம் பட்டார்பால் சென்று இன்றமிழ்ச் செய்யுள்பாடி அவரை இன்புறுத்துவர். அவர்கள் மனமுவந்து பரிசு தருவர். தகுதி அறிந்து அது தரப்பட்டதாயின் அதனைப் பெற்று வாழ்த்தி வருவார்.

தோன்றிக்கோன் என்பவன் ஒரு சிற்றரசன். முடவனார் அவனை அடைந்து, தம்மால் நடக்கமுடியவில்லை என்பதைப் புலப்படுத்தி ஊர்திவேண்டும் என்று ஒருகால் கேட்டார். இப்புலவர்க்கு எது செய்யினும் எது தரினும் அது அழியாப் புகழைத் தரும் என்ற எண்ணம் உடையவன் கோன். ஆதலின், வண்டிப்பகட்டினையும் ஆனிரைகளையும் நிரம்பப் புலவர்க்குத் தந்தான்; புலவரும் வாயார வாழ்த்தி மீண்டார்.

நாட்டின் பல பாகங்களை நேரிற் காண்பதனால் அறிவு பெருகும். சுவடியில் படித்தறியும் பல பொருள்களை நேரில் காண்பது நல்லதல்லவா? பலவகையான குணங்களையுடைய மக்களையும், வேறு பிறவற்றையும் அதனால் நன்றாக அறிந்துகொள்ள முடியும். ஆதலால், நம் புலவர் தென்னாடு முழுவதையுமேனும் சுற்றிப்பார்க்க விழைந்தார்.

வண்டிமீது ஊர்ந்து சென்றார். காவிரி ஆறு பாய்வதனால் நல்ல விளைவையுடையது சோழ நாடு. இந் நாட்டினைச் சுற்றிப்பார்த்தார் புலவர். மலைவளம் சிறந்த சேர நாட்டினையும் கண்டார். பின்பு பாண்டிநாட்டைப் பார்ப்பதற்கு நெருங்கினார்.

பாண்டிய நாட்டினர் பலர், வேறு நாட்டினைப் பார்க்கும் எண்ணத்துடன் ஒன்றுசேர்ந்தனர். அந்நாட்டு நாகனார் என்ற தமிழ்ப் புலவரும் அவர்களுடன் சேர்ந்தார். எல்லாரும் பாண்டிநாட் டெல்லையைத் தாண்டி வந்தனர். வந்தவர்கள், வண்டியையும் அதனுள்ளிருக்கும் புலவர்பெருமானையும் கண்டனர். அப்புலவர் பெருமானை அறிந்த சிலர், "அவர் ஐயூர் முடவனார் என்னும் புகழ் வாய்ந்த புலவர். அவருடன்பேசிப் பின் செல்லலாம்,"

என்று கூறிப் புலவரை நெருங்கினர். கற்றவருடன் கலந்துபேசி மகிழ்வதே மகிழ்ச்சி!

அவர்கள் புலவரை நெருங்கும் நேரத்தில், அவரும் பகட்டினை அவிழ்த்துவிட்டு மர நிழலில்

அமர்ந்தார். வந்த பாண்டிநாட்டினரும், முடவனுரும் ஒருவரை ஒருவர் அறிமுகம் செய்துகொண்டனர். ஒருவர் புலவரை நோக்கி, "ஐயரே! தாங்கள் எங்குச் சென்று வருகின்றீர்?" என்றூர்.

புலவர், "தமிழ்நாட்டினையேனும் சுற்றிப் பார்க்க என்னுள்ளம் விழைந்தது. ஆதலின்,

சோழநாட்டினையும் சேரநாட்டினையும் பார்த்து வருகிறேன்," என்று கூறினார்.

ஒருவர் :—"எங்கள் எண்ணமும் அதுவே. அந்நோக்கத்துடனேயே நாங்களும் புறப்பட்டோம். தாங்கள் கண்டவற்றையும் கேட்டவற்றையும் எங்கட்குக் கூறவேண்டும். புதுவதாக அறிதலைவிடத் தங்கள் மூலம் முதலில் அறிந்தால் அவற்றைக் காணும்போதும், கேட்கும்போதும் நாங்கள் தெளிவாகத் தெரிந்து கொள்ளமுடியும்."

புலவர் :—"நன்று, உங்கள் கருத்தினை அறிந்தேன். சேர சோழ நாடுகளைக் கண்டும் யான் காணாதவனே. ஆதலின், யான் எவ்வாறு கூறமுடியும்?"

ஒருவர் :—"இப்போதுதானே அந்நாடுகளிலிருந்து வருகின்றீர்கள். அங்ஙனமிருக்க ஏன் இவ்வாறு கூறவேண்டும்?"

புலவர் :—"அவ்விரு நாடுகளையும் கண்டேன். ஆங்குப் பல நிகழ்ச்சிகளையும் கேட்டேன். அப்போதெல்லாம், உங்கள் நாட்டு மன்னனாகிய மாறன் வழுதியைக் காண வேண்டும் என்னும் விருப்பமே மிகுதிப்பட்டது. 'நாடு கண்டோம்' எனக் கண்டதால் எனக்கு மகிழ்ச்சி ஏற்படவில்லை."

ஒருவர் :—" அங்ஙனம், விருப்பமுண்டாதற்குக் காரணம் யாதோ ?"

புலவர் :—" உங்கள் நாட்டினை ஆளும் மன்னனது சினத்தை எண்ணும்போது நெஞ்சு பகீர் என்கின்றது."

ஒருவர் :—" தாங்கள் இன்னும் எங்கள் நாட்டெல்லையையும் மிதிக்கவில்லை. அவ்வாறிருக்க, எங்கள் மன்னன் சினமுடையான் என்று எவ்வாறு கூறுகின்றீர்கள் ?"

புலவர் :—" உங்கள் மன்னனை யான் காணவிடினும், அவன் சினத்தைக் கண்டுளேன்."

" என்ன விந்தை ! ஒரு மனிதனைக் காணமல் அவன் சினத்தைமட்டும் தனியே எப்படிக் காண முடியும்? புலவர் ஏதோ தடுமாறுகின்ருர் போலும் !" என்று அங்கிருந்தவரிற் பலரும் நினைத்தனர். நினைத்தவற்றை வெளிப்படையாகக் கூறுதற்கும் அஞ்சினர்.

அவர்தமைப் பார்த்த புலவர், " அன்பினீர் ! உங்கள் மயக்கத்தை நன்கறிவேன். சினம் ஒரு குணம்; அதனைக் குணியுடன் (குணம் பொருந்தியிருக்கும் பொருளுடன்) காணமுடியுமே அன்றித் தனித்துக் காண

இயலாது என்பதுதானே உங்கள் கருத்து," என அவர்கள் மனம் அறிந்து சொல்லினார்.

"நாம் வினவி அதனால் அவர்க்கு மனப் புண்ணை உண்டாக்குவானேன்?" என்று முதலில் எண்ணிய பாண்டிநாட்டுக் குழு வினர்க்கு ஐயம் அறவே ஒழிந்தது. மனம் மகிழ்ந்தனர். 'மேலும் புலவர் என்ன கூறு வாரோ' என்று அறிய ஆவலுற்றனர்.

புலவர் :—"சினமெனும் குணத்தைக் காணமுடியாது என்பது உண்மை. ஆனால், சினம் காரணமாக நிகழ்ந்த காரியங்களைக் காணமுடியு மல்லவா?"

'ஆம்', என் யாவரும் கூறினர். புலவர் தம் அறிவு கண்டு அகமகிழ்ந்தனர். அறிஞர் கூட்டுறவால் உண்டாகும் மகிழ்ச்சிக்கோர் எல்லை இல்லை!

புலவர் :—"உங்கள் மன்னவன் மாறன் வழுதியின் சினம் செய்தவற்றைச் சொல்லு கின்றேன். எம்மால் இரு நாட்டிலும் இவையே அறியப்பட்டன. நீர் தன் நிலை கடந்து ஓடினால் அதனைத் தடுக்கும் அர ணும் உண்டோ? நெருப்பு மிகுந்து நிற்கின், உயிர்கள் தங்குவதற்கு நிழல் இருக்குமா? காற்றுக் கடுகி வீசினால், அதனைப் பொறுக்கும்

வல்லமை யாருக்குண்டு? அவ்வாறே, உங்கள் அரசர் வழுதிக்குச் சினம் மூளுமாயின், அதற்கு எதிரில் உய்ந்து வாழ்வார் எவரேனும் உளரோ? முடிமன்னரும் சிற்றரசரும் தத்தம் உயிரைக் கையிலேந்திநிற்பர். 'அடியேன் யான் மீளா அடிமையாக உள்ளேன்; இவை திறைப் பொருள்; ஏற்று மகிழ்க; சினம் தணிக,' எனத் திறை தந்து உயிர்பெறுவோரே பலர். அங்ஙனம் செய்ய அறியாது தமக்கும் வீரமுள்ளது என மாறுபடுவோர், புற்றினின்றும் புதிதாக வெளிப்படும் ஈசல் ஒரு பகற்பொழுதிலேயே அழிவதுபோல அழிந்தொழிவர். இவையே யாம் கண்டனவும் கேட்டனவும் ஆகும். 'வழுதி' என உரக்கக் கூறுதலே போதும். அந்நாட்டரசர்கள் உடனே கைகூப்பித் தொழுதுநிற்கின்றனர். இங்ஙனம், பகைவரை வணக்கும் சினம் சிறந்த மன்னனைக் காணும் ஆவலுடன் யான் புறப்பட்டுவந்தேன்," என்று சொல்லி முடித்தார்.

முடவனார் தடைபடாது கூறிவந்தனவற்றை அங்கு இருந்தவர் விருப்பத்தோடு கேட்டு நின்றனர். புலவர் சொல்லிக்கொண்டுவந்த போது, அவருள் ஒருவர் முகம், விளக்கம் பெற்றுத் திகழ்ந்தது. உதடுகளும் சிற்சில நேரங்களில் அசைந்தன. சில சொற்களைச்

சொல்ல அவாவும் தன்மையில் அவர் இருந்தார் என்பது புலப்பட்டது. அவர் மனக்கருத்தைப் புலவர் அறிந்துகொண்டார். 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பது பழமொழி யன்ருே! முடவர் அவரைப் பார்த்து, "நீங்கள் ஏதோ உரைக்க எண்ணுகின்றீர்கள் போலும்; அதனைச் சொல்லுங்கள்," என்ருர்.

அவர் :—"நான் சில சொல்ல ஆசைப் படுவது உண்மையே. நான் வடநாடு சென்று இப்போதுதான் மீண்டேன். இவர்கள் தமிழகம் காண விரும்புவதை அறிந்து இவர்களோடு கூடினேன்.

புலவர் :—"தேடிச்சென்ற மருந்து காலில் அகப்பட்டது," என்பது பழமொழி. வண்டி யில் மெல்லச் செல்லும் என்ருல் வடநாடுவரை சென்றுவர இயலாது. ஆதலின், சென்று வந்த உங்களைக் கண்டு மகிழ்கின்றேன். அந்நாட்டு நிலைமையை உங்கள் மூலம் அறிந்துகொள்ள லாம் என எண்ணுகின்றேன். முதலில், உங்கள் பெயரை அறிவிக்கலாமோ?"

அவர் :—"என் பெயர் நாகன். நீங்கள் வடநாட்டினைக் காணவேண்டும் என்பதில்லை. தென்ஞட்டில் பெரும் பகுதியைக் கண்டதே போதும்."

முடவனார் :—“ஏன் அவ்வாறு கூறுகின்றீர்?”

நாகனார் :—“வடநாட்டு அரசர் சேர, சோழரினும் தாழ்நிலையை அடைந்திருக்கின்றனர். அவர்களையும் வழுதி விடவில்லை.”

முடவனார் :—“எவ்வாறு?”

நாகனார் :—“வடவர், வழுதி எண்ணியபடி அடிபணியவில்லை. அவ்வளவுதான்! வழுதிக்குச் சினம் மூண்டது. மலைக்குகையில் உறங்கிக்கிடந்த புலி உணவை வேண்டித் துயிலை வெறுத்து எழுந்தது போல, வழுதி எழுந்தான். வடநாடு எக்கதிக்கு உட்பட்டிருக்கும் என்பதை யான் எடுத்துரைக்க வேண்டுவதில்லை. பிறநாடுகளில் நடந்ததை நீங்களும் அறிந்திருக்கின்றீர்கள். நான் கண்டன சிலவற்றைச் சொல்லுவேன். மீன் நெளிந்தோடும் வயலிடங்கள் மணல் மேடுகளாயின. பொழுது போக்குக்காக மகிழ்வுடன் வட்டாடித் தேய்ந்த இடங்களில் காட்டுக்கோழிகள் முட்டை இட்டுத் தம் இனத்தைப் பெருக்குகின்றன. மக்கள் வாழ்ந்த ஊர், விலங்குகள் இருக்கும் இடமாயின. பெருங் கட்டிடங்கள் இடிந்துவிழ, அவற்றில் கூகை முதலிய பறவைகள் குடியிருந்து பெருங் கூச்சலிடுகின்றன. இவ்வாறு வடநாடு நலமின்றிப் பாழ்பட்டது.”

முடவனார் :—" அப்படியா ? என்னே வழுதியின் வீரம்! வடநாட்டைப் பார்க்கவில்லையே என்று ஒரு வருத்தம் இருந்தது. அதனைப் போக்கிய நீங்கள் என்றும் வாழ்க. யான் வழுதியைக் கண்டு மகிழ்வேன்."

மாணவர்களே, வழுதியின் பெருமை இப்புலவர்களின் வாய்மொழியிலிருந்து எவ்வளவு நன்றாகத் தெரிகின்றது பார்த்தீர்களா !

ச. நெடுஞ்செழியனும் இரும்பொறையும்

1. வளம் பெருக்கிய மன்னன்

பாண்டிநாடு, கிழக்கிலும் மேற்கிலும் தெற்கிலும் கடலையே எல்லையாக உடையது. அக் 'கடலொலியினும் மிக்க ஆரவாரத்துடன் மக்கள் நிறைந்து காணப்படுகின்றனர். 'நம் மன்னனுக்கு இனிக் கவலை வேண்டியதில்லை. அவனுக்குப் பின் முத்தமிழ் செறிந்த இந்நாட்டினை ஆளுதற்குரிய மகன் பிறந்துவிட்டான்,' என்று பாண்டிநாட்டினர் களிப்புக்கடலில் ஆழ்ந்தனர். எங்கும் மகிழ்ச்சி! எவர் முகத்திலும் மகிழ்ச்சியின் விளக்கம் நன்றாக விளங்கிக் கொண்டிருந்தது.

பிறந்த காலத்திலேயே யாவருக்கும் இவ்வாறு மகிழ்ச்சியை உண்டாக்கியவன் செழியன். பிற்காலத்தில் நீண்ட உருவம்; அகன்ற 'மார்பு; விளங்கிய முகம் முதலியவற்றுடன் இவன் தோன்றினமையால், இவனை நெடுஞ்செழியன் என்று யாவரும் அழைத்தனர்.

செழியனாகிய குழந்தை நாடோறும் புதுப் பொலிவுடன் சிறந்து வளர்ந்தனன். தாய்ப்பால் அருந்தினன். தமிழ் முப்பால் குடித்தனன். தவழத் தொடங்கினன். தமிழேடுகளைத் தேடினன். குழைந்த அன்புடன் 'அம்மா, அப்பா'

என்று பல சொற்களைச் சொன்னான். ஈட்டி, வில், வாள் முதலியன இவனுக்கு விளையாட்டுப் பொருள்களாக அமைந்தன.

"செழிய! என் செல்வமே! இங்கே வா!" என அவன் தந்தை அன்புடன் அழைக்குங் காலங்களில், செழியன் திரும்பித் தந்தையைக் காண்பான். விளையாட்டுப்பொருள்களை விட்டு விடுவான். தளர்ந்த நடையுடன் தந்தையை அடைவான். அவன் இரண்டு கால்களிலும் கிண்கிணி கட்டப்பட்டிருக்கும். அவை, அவன் நடந்து வரும்பொழுது, 'கண கண' என்றொலிக்கும். விரிந்த தலைமயிர் அவன் முக மெங்கும் நிறைந்து கண்களையும் மூடிநிற்கும் ஆதலின், அதனைக் கையால் விலக்கிக் கொண்டே வருவான். கைகளில், சிறிய வளை கள் 'கல கல' என்றொலிக்கும். கண்கள், ஆண்மையுடன் பிறழும்.

இளமையிலேயே செழியன் தந்தை இவ் வுலக வாழ்வினை நீத்தான். சிலகாலம் தலைமை அமைச்சனின் சார்பில் அரசியல் நடந்து வந்தது. குழந்தை-செழியன் பதினாறாண்டு நிரம்பிய குமரனானான். பின்பு, ஆட்சியைத் தான் ஏற்று அரசியலைத் திறமையாக நடத்தி வந்தான். இவனே, அரசியல்துறை கைபோய

பேராசர் வழி வந்தவன். ஆதலின், இவன் ஆட்சி மாட்சிமையுடன் சிறந்து விளங்கியது.

இவன் அவையில் அறிவிற் சிறந்த புலவர் பலர் எழுந்தருளியிருந்தனர். அவர்கள் தமிழ் மொழிப்பயிற்சி சிறந்த சீரியோர். அவர் அறியாதன இல்லை. காலமறிந்து, இடமறிந்து, 'செய்யவேண்டுவன இவை; ஒழியவேண்டுவன இவை,' என அவர் அரசற்குக் கூறுவது வழக்கம். அமைச்சரினும், இவரை மிகவும் மதித்தனனாதலின், அரசன் அவர் கூறுகின்றவற்றைக் கேட்டு அவற்றின் நலத்தை அறிந்து, அவர் கூறுமாறே செய்ய முற்படுவான்.

குடபுலவியனார் என்பவர் ஒரு புலவர்; தமிழறிவு சாலப் பெற்றவர். தாம் பிறந்த நாட்டின் நன்மையில் சிறந்த கருத்துடையவர். 'நாம் வாழ்ந்தால் போதுமானது. நம்மை மட்டும் நாம் கவனித்துக்கொள்வோம்,' என்ற தன்னலப்பான்மை அவரிடம் இல்லை. நாட்டு மக்கள் நன்மை பெற்றால் மன்னனும் நலமடைவான். ஆதலின், அரசனை அணுகிப், பின் வருமாறு அவர் நன்மொழிகள் கூறினார்.

"பாண்டியமன்னனே! நின் மரபில் தோன்றினோர் புகழினை நாட்டினர். பின், விண்ணுலக கடைந்தனர்." மாணவர்களே! புலவர் பேசுகின்ற முறையைக் கவனியுங்கள். 'புகழ்

நிறைந்தவர் நின் மரபினர்' என்கின்றார். ஆதலின், இவனும் புகழைப் பரப்பவேண்டும் என்பதைச் சொல்லாமல் சொல்லிவிட்டார். 'நாம் புகழ் பெறுவது எப்படி?' என்று அரசன் எண்ணுவானல்லவா?

மேலும் கூறுகின்றார்—"நின் வாழ்நாள் நீண்டு வளர்வதாக. நீ வாழும் ஊர் மிகப் பழைய தொன்று. அஃது, ஆழ்ந்த கிடங்கினை உடையது. அக்கிடங்கின்கண் பலவகை மீன்கள் உயிர்வாழ்கின்றன. ஊரைச் சுற்றியுள்ள மதில் விண்வரையில் உயர்ந்திருக்கின்றது. நீ விரும்புவது யாது? விண்ணுலக இன்பமா? அல்லது இவ்வுலகம் முழுவதற்கும் தனித்தலைவனாகும் தகுதியா? அல்லது அழியாப் புகழை நிலைநிறுத்தவேண்டுமா? இம் மூன்றும் சிறந்தனவே. இவற்றை நீ அடைய விழைகின்றனையா? ஆயின், யான் கூறுவதைக் கேட்பாயாக."

அடுத்துப் புலவர் கூறும் இன்சொற்களையும் பார்ப்போம். 'பல்லாண்டு வாழ்க,' என்று வாழ்த்தி ஊரைப் புகழ்கின்றார். இச்சொற்கள் அரசன் அறிவிற்குத் தெளிவு தருகின்றன. புலவர் கூறுகின்றவற்றை அவன் கருத்தாகக் கேட்டுவருகின்றான். என்ன கூறுவாரோ என்றும் எதிர்பார்க்கின்றனன். புலவர் கூறு-

கின்றார்: "பெரியோய்! தண்ணீர் இன்றி யமையாதது. இதன் பயனைப் பெறுவது உடல். உடம்பிற்கெல்லாம் உணவு கொடுத்தோர் உயிர் கொடுத்தோராவர். உணவில்லையேல் உடல் மாயும். உணவு என்பது யாது? எனின், நிலத்தொடு கூடிய நீர்; ஆதலின் நிலத்தையும் நீரையும் ஒன்றுகூட்டியோர், உடம்பையும் உயிரையும் ஒன்றுசேர்த்தோராவர். நிலத்தில் நெல்லை விதைத்தாலும் அது நீரின்றி முளைக்காது. ஆதலின் நீரே சிறந்தது. நீர், குடிக்கும் பொருள் என்னும் நிலையில் உணவும் ஆகின்றது. உணவுப் பொருள்களை ஆக்குதற்குத் தண்ணீர் இன்றியமையாதது. உணவுப் பொருள்களை உணவாகச் சமைத்தற்கும் நீர் வேண்டியிருக்கிறது. எல்லாவகையாலும் சிறந்த நீர்நிலையைப் பெருக்க வேண்டும். ஆதலின், நீர்நிலையைப் பெருக்குவோர் இம்மையிலும் அம்மையிலும் ஆவன பெறுவர். நம் நாட்டுக் குடிமக்கள் நீர்க்குறைவால் வருந்துகின்றனர். நீவிர் உடனே நீர்நிலையைப் பெருக்குதற்கு முற்பட வேண்டும்," என்று கூறி முடித்தார்.

புலவர் கூறியவை முற்றிலும் உண்மை என அரசன் அறிந்தான். 'நீரின்றி அமையாது உலகம்' என்ற முதுமொழிச் சிறப்பை

உணர்ந்தான். அன்றுதொட்டு நாட்டில் நீரின்மை எனும் பெயரை ஒழித்து, 'வளம் பெருக்கிய மன்னன்' எனப் பெயர் பெற்றான்.

நிலவளம் நீர்வளம் நாட்டில் சிறந்தன. புலவர் பலர் 'நந்நாடு' எனப்போற்றி அங்குத் தங்கினர். குடிமக்கள் மடிமக்கள், மிடிமக்கள் எனும் தீப்பெயரில்லாதவ ராயினர். 'மன்னுயி ரெல்லாம் மன்னன் தன்னுயிர்' எனும் கொள்கையை மன்னன் நெடுஞ்செழியன் உடையவன் என்று பலராலும் புகழப்பட்டான். இப் புகழ்ப்பெயர் பாண்டி நாட்டில் நிலைத்தது. மேலும் மேலும் வளர்ந்த புகழ், பாண்டி நாட்டில் இடமின்மையால், சேர நாட்டிலும் பின் சோழ நாட்டிலும் பரவலாயிற்று.

2. சேரன் பொறுமை

நெடுஞ்செழியன் பாண்டி நாட்டை ஆண்டுகொண் டிருந்தபொழுது, மலை நாடாகிய சேர நாட்டை, இரும்பொறை என்பவன் ஆண்டுவந்தான். இவன் முழுப் பெயர், யானைக்கண்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை. அளந்தறிய முடியாத புகழினை யுடையவன். குடிமக்கள்பால் அன்பும் கண்ணோட்டமும் உடையவன். இவன் நாட்டிலுள்ள மக்கள், சோற்றைச்

சமைக்கும் நெருப்பை அறிவர்; ஞாயிற்றின் வெம்மையை அறிவர்; ஆனால், என்றும் பகைவரால் உண்டாகும் துன்பத்தை அறிந்திருக்கமாட்டார்கள். உழுகின்ற கலப்பை என்னும் படையை அறிந்திருப்பர்; பகைவர் படைக்கலத்தை அறியார். இந்திரவில்லையன்றிப் பகைவர் கொலைவில்லைக் கண்டாரில்லை. இத்தகைய உயர்வுகளால் இவன் ஆண்ட நாடு புத்தேள் உலகத்திலும் பொலிவுற்றிருந்தது.

'ஆனைக்கும் அடிசறுக்கும்;' இச் சேரமானும் ஒரு பெருங்குற்றம் செய்தனன். அது என்ன குற்றம்? பாண்டியன் நெடுஞ்செழியன் புகழ் யாண்டும் பரவிற்று என்று முன் கூறினேம் அல்லவா? அப்புகழ், மலைநாட்டிலும் இடமில்லை எனும்படி பரந்தது. மன்னன் இரும்பொறையின் இருசெவியினூடும் அந் நல்லுரை அடைந்தது. இதுவரை அவனிடத்தில் இல்லாதிருந்த ஒரு கொடுங்குணம் அப்போது தோன்றலாயிற்று.

"அழுக்கா(று) எனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்"

என்பது நம் முதுமறை.

எல்லாத் தீய குணங்கட்கும் தாயகமாய் விளங்குவது, பொறாமை. இஃது ஒருவனைச்

சார்ந்தால் அவன் நற்குணங்கள் ஒன்றினை யும் இருக்க வொட்டாது அழித்துவிடும். வேறு செல்வச் சிறப்பு இருப்பின், அதனை யும் ஒழிக்கும்; அவ்வளவில், விடுத்தலைச் செய்யாது மீளாத்துன்பத்திலும் கொண்டு சேர்க்கும். இப் பொல்லாக் குணம் நல்ல அரசனாகிய இரும்பொறையைப் பற்றியது. பொறாமைத் தீ, அவனுள்ளத்தில் கொழுந்து விட்டு எரியத் தொடங்கிற்று. "இளஞ் சிறுவ னாகிய செழியனே சிறந்தவன்! இவனால் என்போன்ற பேரரசர் புகழ் அகழியிலன்றோ அழுந்திவிடும்! 'இளைதாக முள் மரம் கொல்க,' என்றனர் அறவோர். முள் மரம் போன்றிருக்கும் இவனை இப்பொழுதே ஒழிக்க வழிதேடல் வேண்டும்;' என்று மனம் எரிந்து சொன்னான். பாண்டியனின் உயர்ந்த புகழை அழிக்க அடிப்படையான ஏற்பாடு ஒன்றினைக் கைக்கொண்டான்.

மடங்காப் பனை ஓலை ஒன்றினை எடுத்து முடங்கல் ஒன்றை எழுத்தாணியால் தீட்டி னன். யாருக்கு? அக்காலத்துச் சோழ நாட்டினை ஆட்சி புரிந்தவன் இவனுக்குத் தோழன்; ஆதலால் அவனுக்கு ஓலை எழுதி னான். "பாண்டியனை எதிர்ப்பது என் எண் ணம். சின்னாளில் நம்புகழ் நம்மைவிட்டு நீங்கா

திருக்க, இவனை எதிர்த்து அழித்தல் வேண்டும். எனக்குதவியாக நீவிர் அமைதல் போதும்," என்பதே அவன் விடுத்த வேண்டுகோள். 'போர்' என்றாலே பொலிந்து மகிழும் சோழன், "நன்று, என் அளவில் எக்குறைவு மின்றி நினக்குப் படைத்துணையாவேன்," என உடனே எழுதி அனுப்பினன்.

தமிழ் நாடு முழுவதும் ஆங்காங்கே சிற்றரசர் பலர் வாழ்ந்திருந்தனர். அவருள் புகழ்படைத்தவர் சிலராவர். அவர், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் என்போர்.

திதியன் போரிலடங்காச் சினத்தான். பகைவரைப் புறங்கண்டன்றி வெகுளி தணியாதவன்.

எழினி என்போன் சிறந்த வள்ளல். குதிரைமலை எனும் இடத்தைத் தன் ஆட்சிக் களமாகக் கொண்டவன். சிறந்த யானைப் படையை உடையவன். கந்தழிக்கடவுள்பால் நீங்காத அன்பினை உடையவன். கூவிள மலரைத் தலைமாலையாகப் புனைந்திருந்தவன்.

எருமையூரனும் சிறந்த வீரனே.

இருங்கோவேண்மான், சிறந்த கொடைக்குண முடையவன். இல்லை என்று

இரப்போர்க்கு இல்லை என்று சொல்லாத உள்ளம் வாய்ந்த வள்ளல்; வேளிர் தலைவனாய்ச் சிறந்தவன். ஒருகால், இவன் காட்டுப் பக்கம் போய்க் கொண்டிருந்தான். அருந்தவ முனிவர் ஒருவர் பெருந் தவம் செய்துகொண்டிருந்தார். அவரைக் கொல்ல ஒரு புலி முற்பட்டது. முனிவர் அப்போழ்து, மன்னனும் இவனைக் கண்டு புலியைக் கொல்லுமாறு ஏவினார்.

அவர் எண்ணத்தின் வழி நின்று உடனே புலியைக் கொன்றான். அதனால், 'புலிகடி மால்' எனும் காரணப் பெயரையும் பெற்றான்.

பொருநன் தேர்ப்படை உடையவன். திதியன், எழினி முதலிய இவ்வேளிர் குலத் தலைவர்களாகிய சிற்றரசர்களைப் பற்றிய நினைவு, அடுத்து இரும்பொறைக்கு வந்தது. யானைப்படை, தேர்ப்படை என்பவற்றில் வன்மையமைந்த எழினி, பொருநன் ஆகியோருடன் மற்றவரையும் தன் பக்கல் இருத்திக் கொண்டால், வெற்றி வேற்றிடம் புகாது; தன்னகம் புகும் எனச் சேரன் எண்ணினான். ஆதலின், இந்த வேளிர்குலத்தலைவர் ஐவர்க்கும் தன் மனதில் உள்ள எண்ணத்தை எழுதி அனுப்பினான். பேரரசனாகிய இவ

னுடன், நாம் மாறுகொள்ளின் நம் நாட்டுக்கும் இறுதி நேரும் என்று எண்ணி, இரும்பொறையின் ஏற்பாட்டிற்கு அவர்களும் இணங்கினர்.

“சோழமன்னனது படை, வேளிர் ஐவரின் வெற்றிப்படை, நமது படை, ஆகிய இம்மூன்றுடன் நான் தாக்குவேனுனல் பாண்டியன் என்ன ஆவான்? வீழ்வான்! ஒழிவான்! அவன் மாட்சிமை நீங்கும். பாண்டியனைச் சேரன் வென்ருன். பாண்டியனினும் சேரனே சிறந்தவன். சேரன் புகழே புகழ்! சேரன் நீடூழி வாழ்வானுக!' என என்னைப் புலவர் பாடுவர். என் புகழ் எங்கும் பரவும்,” என்று இரும்பொறை மணல் கோட்டை கட்டினுன். இத்தகைய எண்ணங்கள் பலவாருகப் பல்கின. ஆதலின், மனத்திலும் அடங்காமல் வெளிவரத் தொடங்கின.

அவையில் சேரன் அமர்ந்திருக்கிருன். அமைச்சர் பலர் அருகில் இருக்கின்றனர். படைத்தலைவர் பலரும் இடமின்றி எங்கும் நிறைந்துள்ளனர். வேளிர் ஐவரும் சோழமன்னனும் சிறக்க வீற்றிருக்கின்றனர். “அன்பினீர்! என் விருப்பத்திற்கிணங்கி ஒன்றுசேர்ந்தீர். உங்கட்கு என்றும் என் நன்றி உரியது. ஆண்டிலும் அறிவிலும்

மிக இளைஞனாகிய அந் நெடுஞ்செழியன் நமக்கு நெடுந் தொலைவில் இருக்கின்றான். ஆனால், நம் சிறையினுள் இருப்பவனே! இவன் நாட்டினையும் இனிப் புலவர் புகழ்வாரோ? புகழின் அவர் அறிவை என்னென்போம்! அவரைக் கண்டு சிரிப்போம்! நிற்க, நன்னாளில் நம் படை புறப்படும்,'' என்று கூறினன். கேட்டோர் யாவரும் வீரம் கிளர்ந்து விளங்கினர்.

3. பாண்டியன் வஞ்சினம்

ஒற்றர் அரசருடைய ஏவலாளருள் ஒரு சாரார். இவர் தூதரினும் சிறந்தோர். தூதர் நேரில் அறியமுடியாதவற்றை ஒற்றர் மறைந்திருந்து அறியும் அறிவுறப் பெற்றவர். இவ் வொற்றர் பலரைப் பாண்டியன் நெடுஞ்செழியன் பெற்றிருந்தான். இவர்கள் பாண்டிய நாட்டிலும், மற்ற நாட்டிலும் மறைந்திருந்து ஆங்காங்கு நடப்பவற்றை அவ்வப்போதே அரசனுக்கு அறிவித்து வரும் வழக்கமுடையார். இவர்களால், தன் நாட்டு மக்களின் மனக்குறைவையும் நிறைவையும் அறியும் வாய்ப்பும் அரசனுக்குக் கிட்டிற்று. குறைவுகளை அறிந்தவுடனே, அவற்றைப் போக்கி, மக்கட்கு வேண்டும் நலங்களைச் செய்வான். பிறநாட்டில் மறைந்தறியும் ஒற்

றர், பிறநாட்டரசர், தம் நாட்டு மன்னனுக்கு இடையூறு விளைக்க எவற்றைக் கைக் கொள்ளுகிறார்கள் என்பதை அறிவர். உடனே அம் மன்னருக்கு அறிவிப்பர். இதனால், அரசனும், தன் பகைவரை எதிர்ப்பதற்குப் படைவலியுடன் இருப்பான்.

ஆண்டிலும் அறிவிலும் இளைய செழி யனை அடக்கல் மிக எளிது என்று கூறினான் சேரநாட்டு மன்னன் என்று முன் சொன் னோம். செழியனின் ஒற்றர், இச் சொற் களைத் தம் அரசனுக்கு அறிவித்தனர். அறி வும் ஆற்றலும் அமைந்த அரசன், எவ் வாறு இவ்விழிசொற்களைப் பொறுத்துக்கொண்டு இருப்பான்! "தன்னை அடக்கவேண்டும் எனச் சேரன் எண்ணுவானேன்? அவ்வரசனுக்கு யான் ஏதும் இடையூறு இழைக்கவில்லையே! என் நாட்டு மக்கள் நலமுடையவராகத் திகழ வேண்டும் என்று அவர்களுக்கு ஆவன செய் தலை யான் மேற்கொண்டால், இவனுக்கு என்ன? இவன் ஏன் இவ்வாறு இழிசொல் கூற வேண்டும்? நன்று! இந்நாட்டினைப் புகழ்ந்து கூறும் சொற்கள் இவன் செவிக்குக் காய்ச்சிய செப்புக் குழம்பாயிற்றோ? மிக நன்று! பல படை மிக உடையோம் எனத் தருக்கினன் போலும்! சிறுசொல் சொன்ன இவ்வேந்த



நெடுஞ்செழியன். வஞ்சினங் கூறுதல்.

னின் படையை முறியடிப்பேன். முரசத்துடன் இவனைச் சிறை செய்வேன். இங்ஙனம் யான் செய்யவில்லையேல், ' எம் வேந்தன் கொடியன்,' என்று அழுத கண்ணீருடன் குடிமக்கள் பழி தூற்றும் கொடுங்கோலை யான் உடையவனாகுக! என் நில எல்லை புலவரால் பாடப்படாது நீங்குக!" என வஞ்சினம் புகன்றான்.

மாணவர்களே! செழியன் கூறும் வஞ்சினச் சொற்களைக் கருதுங்கள். 'என்னை இழி சொல் கூறியோரை வெல்வேன். இன்றேல் கொடுங்கோலனாகுக!' என்கின்றனன். அரசர்கள் குடிகளின் நன்மையில் எத்தகைய கருத்துக்களைச் செலுத்தினர் என்பது அவன் வார்த்தைகளால் நன்றாகப் புலப்படுகின்றது.

பாண்டியனின் படைத்தலைவன், மன்னன் வெகுளியை உணர்ந்தான். அரசன் கூறிய சூளுரையின் சிறப்பினை அறிந்தான். வாய் புதைத்து எழுந்து நின்றான். "நம் பகைஞர் காற்றில் பறக்கும் பஞ்சினும் நொய்யர். அவரை அழித்தல் நமக்குப் பெரியதொரு செயலன்று," என்று இயம்பினான். செய்தி கூறிய ஒற்றன், "பகைவர் கூட்டத்தை அழிப்பவனே! பண்பு சிறந்த பாண்டியனே! யான், மேலும் கூற வேண்டியவை சில வுள," என்றனன். 'சொல்

லுக' எனச் சொல்லுவான்போல், மன்னன் நோக்கினுன்.

> "நுண்ணிய மென்பார் அளக்குங்கோல் காணுங்கால்
> கண்ணல்ல தில்லை பிற"

என்பது தமிழ்மறை. ஆதலின், அரசன் குறிப்பினை ஒற்றனும் அறிந்துகொண்டான்.

ஒற்றன், "தலைவரீர்! சேரன் தனித்துப் போர்செய்ய முற்படவில்லை. சோழனையும், வேளிர் தலைவர்களையும் தனக்குப் படைத்துணை யாகக்கொண்டுள்ளான். ஆதலின், அக் கூட்டுப் படையால் எவ்வாறேனும் வெற்றி அடையலாம் என்று அவன் எண்ணுகின்ருன்," என நிலைமையினை நன்ருக எடுத்துக்காட்டினுன்.

நெடுஞ்செழியனின் சினம் ஓங்கி வளர்ந்தது. ஒழுக்கம் விழுப்பம் தருவது. ஒழுக்கம் இழக்கலாகாது. ஒழுக்கத்திற்குக் கேடு வரின், ஒழுக்கம் மிக்கோர் அதனை ஆற்ருர். பாண்டியன் ஒழுக்கம் நிறைந்தவன். சேரன் முதலியோர் ஒழுங்கற்ற முறையில் போரிட முற்படுகின்றனர். ஆதலால், நேர்மையான வஞ்சினத்தில், பாண்டியன் அழுந்தினன். கண் அனலைக் கக்கப், படைத்தலைவனைப் பார்த்தான். "படைத்தலைவரீர்! நம் சேனை சேரநாட்டை நோக்கிச் செல்லட்டும். அவரும் புறப்பட்டு

நம்மை நோக்கி வருகின்றனர்; காலம் தாழ்த்தல் வீண். ஏற்பாடு செய்தற்குக் காலம் இல்லையாயினும் உள்ள வீரருடன் புறப்படுக. ஆள்வலிமையையே கருதிக் கொண்டிருக்க வேண்டா; அறத்தின் வலிவு நமக்குண்டு. அறக்கடவுள் நம்முடன் இருக்கும். நாம் வாகை சூடுவோம். வெற்றி நமதே. அச்சமில்லை," என்று உணர்ச்சியுடன் உரைத்தான்.

4. அறத்தின் வெற்றி

தலையாலங்காடு என்று இப்போது வழங்கும் இடம், முற்காலத்துத் தலையாலங்கானம் எனப் பெயர்பெற்றிருந்தது. இவ்விடத்தை இருசாரார் படைகளும் அடைந்தன.

நெடுஞ்செழியன் கால்களில் வீரக்கழல்கள் ஒலிக்கின்றன. அவன் குலத்து அடையாள மாலையாகிய வேப்பமாலை அவன் மார்பில் விளங்குகின்றது. கையில், வில் ஒளி விடுகின்றது. தேரின்கண், தேர்க்கொடுஞ்சியைப் பிடித்துக்கொண்டு வீரம் பொலிய நிற்கின்றான். தம் மன்னன் நிற்கும் நிலையினைக் கண்ட வீரர், தம் மனம் உருக, உயிரினைத் துரும்பென மதித்து, அஞ்சா நெஞ்சினராய் அம்புகளையும் பிற ஆயுதங்களையும் பகைவர்மேல் எறிந்து போர் செய்கின்றனர்.

வீரர்தம் நன்முயற்சியைக் கண்ட மன்னன் மனம் குளிர்ந்தான்; தானும் போரில் கலந்துகொள்ள விழைந்தான். ‘வில் வேண்டா’ என வெறுத்தொதுக்கினான். வேற்படையும் வேண்டியதில்லை என்றனன். கைகளைத் தட்டி மற்போர் புரியும் எண்ணத்தினனாய்ப் போர்முகப்பை அடைந்தான். அரசனும் போரில் கலந்துகொண்டான் என்பதை மள்ளர் அறிந்தனர். அப்போது அவர்கள் உணர்ச்சி எவ்வாறிருக்கும்? சொல்லும் தரத்ததோ? ஒவ்வொருவனும், தானே மன்னனுக்கு வெற்றிதரத் தக்கவன் என்று எண்ணிக் கொண்டனன். பகைவர் உலைந்து நிலைகுலைந்து அழப் போரிட்டனர்.

பாண்டியன் மல்லனாய் நின்றான். சிங்கக் குருளைபோல் திரிந்தான். வலிமிக்க தன் இரு கைகளாலும் பல வீரரை அகப்படப் பிடித்து மண்ணிடை மோதி விண்ணுலகிற்கு விருந்தென அனுப்பினான். தன்னால் மன்னர் கொல்லப்படுகின்றனர் என மகிழ்ந்தானா? இல்லை. அன்றி, இவ்வளவு வீரரைக் கொன்றோம் எனத் தன்னை வியந்தானா? இல்லை. பின் எவ்வாறுதான் மன்னன் மனம் இருந்தது? இவ்விரு வகையிலும் படாது வெற்றி என்னும் குறிக்கோள் ஒன்றில் மட்டும் அமைந்துநின்றது.

முழு வெற்றியில் கருத்தூன்றுவோர் இடை இடையே தோன்றும் சில நிகழ்ச்சிகளில் தம் மனத்தை நிறுத்தமாட்டார்.

வேளிர் சேனை, சின்னாபின்னமாயிற்று. சோழநாட்டு வீரர் சோர்வுற்றனர். சேரல் நிலையினை எவ்வாறியம்புவது! சோழருக்கும் வேளிருக்கும் நேர்ந்த கதியே சேருக்கும் விதியாயிற்று. 'இனி நம்மால் பாண்டியருடன் போரிட முடியாது' என்று எண்ணிய பாண்டியனின் பகைவர், பின் வாங்கினர். பாண்டியன் சேனை அவர்களைத் துரத்தி, உருக்குலைத்துத் துன்புறுத்திற்று. வேளிர் சாய்ந்தனர். சோழன் யாண்டுச் சென்றனன் என அறியமுடியாது போயிற்று. மாந்தரஞ்சேரல்மட்டும் வீரர் சிலருடன் போர்புரிந்து கொண்டிருந்தான். இப்போருக்கு முதற்காரணம் அவனே.

பாண்டியன், யானைக்கண்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறையையும் அவனைச் சூழ்ந்து நின்ற வீரர்களையும் கண்டனன்; தனது படையுடன் அங்குச் சென்றான். சில நாழிகையில், மெய்க்காவலர்வரை யாவரும் அழியச், சேரல் தனித்தவனானான். ஆற்றல் அழிந்து நின்ற அம்மன்னனைச் செழியன் விழைந்திருப்பின் அக்களத்திலேயே கொன்றிருப்பான். ஆனால் அவனைக் கொல்லும் விருப்பம் செழியனுக்கு

உண்டாகவில்லை. ஏன்? அவனும் தமிழ் நாட்டு மன்னன். கண்ணைக் குத்திற்றென்று விரலை வெட்டுவாருண்டோ? சேரன் அழுக் காற்றினால் போரிட வந்தான். கொல்ல வந்த ஒன்றைக் கொல்லுதல் முறையேயாயினும், நம் பாண்டியனுக்குக் கொலை எண்ணம் வரவில்லை. அவன், மாந்தரஞ்சேரலை உயிருடன் கட்டித் தன்னுடன் கொண்டு சென்றனன்.

புலவரால் பாராட்டப்பட்ட சிறப்புடைய மன்னன் கதி யாதாயிற்று? இச் சேரல் தாழ்ந்த நிலைமையி லிருந்தவனும் அல்லன்; கருணை நிறைந்தவன். 'விளங்கில்' எனும் ஊரில் வாழ்ந்தோர்க்கு வேற்றுப்பகைவரால் துன்பம் நேர்ந்தபோது, இவன் அப் பகைவரை ஒழித்து நலம் விளைத்தான். கபிலர் என்ற சிறப்புடைய புலவரின் நண்பன். புறநானூறு முதலிய சங்க நூல்களுள் ஒன்றாகிய 'ஐங்குறுநூறு' என்னும் அரிய நூலினைத் தொகுத்த அருஞ்செயலாள னும் இவ்வரசனே. கூடலூர் கிழார், பொருந் தில் இளங்கீரனார் ஆகிய புலவர்கள் இவனை வாழ்த்தியுள்ளனர். இங்ஙனம் பலவகையாலும் உயர்ந்த மன்னன் மற்றொரு நாட்டு மன்னனால் கட்டப்பட்டான்! சிறை செய்யப்பட்டான்.

சேரனுக்கு இத்துன்பம் ஏன் வந்தது? பிறர் துன்புறுத்தவில்லை. தானே அதனை உண்

டாக்கிக்கொண்டனன். அழுக்காறு என்னும் இழிகுணம் எங்கு இருக்கின்றதோ, அங்குள்ள பெருமை முதலிய நற்குணங்கள் நீங்கிவிடும் என்பதற்கு, இதனினும் வேறு சான்று வேண்டுமோ? படைவன்மையால் செழியன் வென்றான் என்பதினும், அழுக்காறு என்ற தீக்குணம் சேரலைத் தோல்வியுறச் செய்தது என்பது பொருந்தும்.

"அழுக்கா றுடையார்க்(கு) அதுசாலும் ஒன்னார்
வழுக்கியும் கேடீன் பது"

என்பது நம் அருந்தமிழின் மாயா வாய்மொழி.

---

௫. கற்புடைய மங்கை

1. தலைவன் பிரிவு

காவிரிப்பூம்பட்டினம், சோழர் தலைநகரமாய்த் திகழ்ந்தது. கடலின் துறைமுகமாகவும் சிறப்புற்று விளங்கியது. அப்பட்டினத்தில் சாதுவன் என்போன் ஒருவன் வாழ்ந்துவந்தனன்; செல்வம் மிகப் பெற்றவன்; 'பொருளினைப் போற்றி வாழ்,' எனும் உயர்மொழியைக் கடைப்பிடித்து அவன் மூதாதையர் ஈட்டிய பொருளுக்கோ எல்லை இல்லை. ஆயினும், அதனை எவ் வழியில் செலவிடுதல் நல்லது என்பது சாதுவனுக்குத் தெரியவில்லை. அவனுக்கு நல்லறிவு இல்லை. அவன் தவறான வழியிலேயே பொருளைச் செலவிட்டுவந்தான்.

சாதுவனுடைய இல்லக்கிழத்தியின் பெயர் ஆதிரை. அவள் திருமகளுக்கு நிகரான அழகுடையவள். கற்பென்னும் செல்வத்தைப் போற்றிப் பொலிந்தவள். 'கொழுநனினும் உயர்ந்த கடவுள் இல்லை; கொழுநனே கடவுள்,' என்னும் உறுதியான எண்ணம் படைத்தவள். மங்கையர்க்கு அரசியாகத் திகழ்ந்தவள். இத் தகைய நன்மனைவியைப் பிரிந்து, சாதுவன் வாழத் தொடங்கினான்.

சாதுவன் எங்குச் சென்றான்? காவிரிப்பூம் பட்டினத்தின் கணிகை ஒருத்தி இருந்தாள். தேனினை உறிஞ்சிப் பின் வெறும் பூவினை விட்டு நீங்கும் வண்டு. அதனை ஒத்தவள் இவள். ஆதிரையின் அருமையான குணங்களுக்கெல்லாம் நேர் மாறான இழி குணங்களே உருவமாக உள்ளவள். இவளைப் புகலிடமாகக்கொண்டு புகுந்தனன் சாதுவன்.

ஆதிரையைப் பிரிந்து வாழ்தல் என்ற அளவிலேயே சாதுவனது தீச்செயல் நின்று விடவில்லை; மிகக் கொடிய செயல்களுள் ஒன்றாகிய சூதாடுதலையும் மேற்கொண்டான். சாதுவனது நிதிக்கொட்டில் மிக விரைவில் வெறிதாயிற்று.

சாதுவன் எச்செயலுமின்றிச் சாதுவானான். இவனிடம் பொருளில்லாமையால், கணிகை கடுஞ்சொல் கூறி வெளியில் துரத்தி விட்டனள். கவறாடும் நண்பர்களும் கைவிட்டனர். சாதுவன் வேறு வழி இன்றி வீட்டை நோக்கி நடந்தான்.

2. நடத்தையின் பயன்

பெருமை குலைந்த சாதுவன், தன் உரிமை வீடு அடைந்தான். பேரன்புடன் தலைக்கற்பில் சிறந்திருந்த தன் இல்லக்கிழத்தியைக் கண்டான். நெருப்பில் இடினும், பொன் தன் நிறம்

மாறுது நன்னிறங்கொண்டு சிறக்கும். அவ்வாறே, தனக்கு உண்டான துன்பமாகிய பெரு நெருப்பில் ஆதிரை பொன்போல் ஒளிர்ந்து நின்றனள். அவள் மனமாற்றம் ஒரு சிறிதுமின்றித் தன்னை வரவேற்று நிற்றல்கண்டு, சாதுவன் மனம் துண்ணென்றது. தான் செய்த பிழைகளை அவன் நெஞ்சம் உற்றுணர்ந்து நீராய்க் கரைந்தது. கண்ணீர் இருவிழிகளில் இருந்தும் அருவிபோலப் பெருகி வழிந்தது.

ஆதிரையோ அறிவிற் சிறந்தவள். கொழுநன் அடையுந் துயர்கண்டு அவள் நெஞ்சம் பொறுக்க முடியவில்லை. கணவன் திருவடிகளில் வீழ்ந்து, 'நடந்துபோனதை நினைந்து இனி வருந்த வேண்டாம்,' என்று உருக்கமாக வேண்டிக்கொண்டாள்.

நாள் பல கழிந்தன. தனது பெரும் பொற்குவியல் தீயவழியில் மாய்ந்ததை எண்ணிச் சாதுவன் மிக வருந்தினன். 'என் செய்வது' என்ற கவலைபட்டும் அவனுக்குத் தோன்றவில்லை. ஏன்? பெரும்பொருளை இழந்தமையால் பேர் அறிஞனுனன். அவனுள்ளத்தில், முன்னிருந்த மடமைக்குணம் இடமின்றி ஒழிந்தது. பகுத்தறிவு சிறந்து விளங்கிற்று. 'தீயவை இவை நல்லவை இவை,' என்று உணரும் அறிவு வரப்பெற்றான். யாது நேரினும், இனித்

தீயவழியில் தன் அறிவு தொழிற்படாது என்னும் உறுதி அவனுக்கு வந்தது. பொருளுக்கு என் செய்வான்?

அறம், இன்பம் என இரண்டையும் தருவது பொருள். பொருளில்லாதபோது இல்வாழ்வான், தான் செய்ய வேண்டியவற்றை எவ்வாறு செய்வான்? ஆதலின், பொருளீட்டலைபற்றிச் சாதுவனுக்குப் பல எண்ணங்கள் தோன்றின.

தமிழ்நாட்டு இளைஞர் தம் மூதாதையர் ஈட்டிய பொருளில் கருத்தினைச் செலுத்த மாட்டார். 'வினையே ஆடவர்க்கு உயிர்' என்பது அவர்கள் கொள்கை. தம் முயற்சியினால் பொருள் ஈட்டிச் செலவு செய்தலையே விரும்புவர். அவ்வாறு ஈட்டப்படுவதே அறம் செய்வதற்கு ஏற்றது. ஆகவே, இனியாவது பொருளீட்ட வேண்டும் என்று எண்ணங்கொண்டான்.

வணிகர்கள், கலங்களில் ஏறி, வாணிபம் செய்வதற்காகப் பல இடங்கள் செல்லுதலுண்டு. அவ்வாறு செல்வோர் கூட்டம் கூட்டமாகச் செல்வர். காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து அத்தகைய கூட்டம் ஒன்று, புறப்படுதற்கு ஏற்பாடுகள் செய்தது, சாதுவன். அக் கூட்டத்தாருடன் செல்ல ஆவல்கொண்டனன். தன்

கருத்தை ஒருவாறு மனைவிக்குத் தெரிவித்துப் பிரிந்தான்.

இந்நாளில், கப்பலில் எல்லா நலங்களும் அமைந்திருக்கின்றன. நீராவியின் வன்மையால் ஓடுதலின், அஞ்சவேண்டியது மில்லை. கடல் கடப்போர்க்கு எவ்வகையான தொல்லையும் நேராது. காற்றின் உதவியையும் தேடமாட்டார். முற்காலத்தில், கப்பல்கள் இவ்வாறு அமையவில்லை. பாய்மரம் விரித்துக் கட்டப்பட்டிருக்கும். காற்று வீசும்பொழுது அதன் உதவியினுல் நாவாய் செல்லும். உயிருடன் எண்ணிய இடத்தை அடைதல் மிகக் குறைவே.

கப்பலில் சாதுவன் ஏறியிருந்தான். கப்பல் தலைவன் கடற் கடவுளைத் தொழுது, கப்பலைச் செலுத்தினுன். அசைந்தசைந்து கப்பல் நடுக் கடலை அடைந்தது. சாதுவன் நீலநிறம் பெற்றுத் திகழும் கடலை ஆழ்ந்த நினைவுடன் காண்கின்றுன். காணக்காண விரிந்து பரந்து எங்கும் நிறைந்து நிற்கும் கடவுளை எண்ணும் வாய்ப்பும் சாதுவனுக்குக் கிட்டியது. "என்னே! இக்கடலினை முற்ற உணர்ந்தார் யார்? இதன்கண் நிறைந்து ஒளிரும் அருமணிகளையும் பிற அளவிறந்த செல்வங்களையும் அறிந்தார் எவர்? எத்துணை மக்கள் இக் கடலில் அடங்கித் தம் உயிரை ஒப்புவித்தனரோ?

இவ்வாறே, தம் இயல்பு முழுவதும் பிறரால் அறிய முடியாத நிலைமையிலிருப்பவன் எம்பிரான் ஒருவன் அன்றோ? கடவுளாகிய குணக்கடலின் குணச்சிறப்புக்களை அறிந்தார் யார்? அவனது பேரின்பத்தில் அடங்கிக் கிடப்போர் தொகையை அளவிட்டு உரைக்கவும் ஆகுமோ?'' எனக்கடலையும் கடவுளையும் ஒன்றுகூட்டி உணர்ந்தான். சீரிய கடவுளின் இணையடிகளில் தன் கருத்தைச் செலுத்தாது, தீய நெறிகளில் தன் காலத்தைக் கழித்ததையும் எண்ணி வருந்தினன்.

ஒருநாள், ஞாயிறு மறைந்தது. மாலையும் மாய்ந்தது. எங்கும் இருள் நிறைந்தது. செம்பொன் தகட்டை யொத்து வெண்ணிலா விளங்கியது. நற்காற்று மெல்லெலன வீசியது. கடல் அமைதி நிறைந்து விளங்கிற்று. சில நாழிகைகள் ஆயின. நள்ளிரவு வெள்ளென, வெண்ணிலவில் மூழ்கியிருந்த வானம் கருநிறம் பெற்றது. மேகங்கள் எங்கிருந்தோ வந்து ஒருங்கு குழுமின. இளங்காற்று, கொடுங்காற்ருயிற்று. மகிழ்ச்சியுடன் அலைமேல் அமர்ந்து கடல் மீன்களைக் கவர்ந்து உண்டு மகிழ்ந்த பறவைக்கூட்டம் விரைவில் மறைந்தது.

கடற் பழக்கம் உடையோர் புயற்காற்று வீசும் என்று சொன்னர்கள். அலைகள் மலைகள்

போல் எழத் தொடங்கின. மண் மலைகளையே கண்டு பழகிய சாதுவன் கண்கள் விண்வரை முட்டும் நீர் மலைகளையும் கண்டன. கப்பல் ஒரு தலைக் கொருதலை உயரும்; சாயும், உள்ளிருப் போரை வெளியில் தள்ளிவிடுமோ என்ற ஐய மும் உண்டாகும். வாய்திறந்து விழுங்க வருவன போலப் பேரலைகள் கப்பலை நோக்கி வந்தன.

காற்றின் கடுமை உச்ச நிலையை அடைந் தது. கப்பல் மிக அலைந்தது. கப்பலின் கட்டு



அசைந்தது, கப்பல் ஆடுவதனால் பலகைகள் வலிவிழந்தன. பாய்மரம் ஒடிந்தது. இனிப் பிழைக்க முடியாது எனக் கப்பல் தலைவனும்

கருதினுன். ஆதலின், யாவரையும் நோக்கி, அவரவரும் தத்தம் வழிபடு கடவுளை வணங்கிக் கொள்ளுமாறு கூறினுன். பேரலை ஒன்று! கலத்தின் முற்பாகம் நீருள் அமிழ்ந்தெழுந்தது. நீரின் கனத்தோடு கப்பல் அலையவே, பலகைகள் தனித்தனியே பிரிந்தன.

கலத்துள்ளிருந்தோர் நீர்மேலாயினர். ஒவ்வொருவருக்கும் அவரவர் உயிர் உயர்ந்தது. அதனைக் காப்பாற்ற எத்தகைய முயற்சியையும் கைக்கொள்வர் நீருள் அமிழ்வோன் வைக்கோல் துரும்பினையும் பற்றுவான் என்பர். அவ்வாறே, கடலில் தள்ளப்பட்டோர், கைப்பட்ட தொன்றைப் பிடித்துக்கொண்டு உயிருக்காக நீந்தினர். சிலர், எந்த எண்ணமும் மனத்தில் வரும் முன் மாண்டனர்.

3. சாதுவன் துயர்

மறுநாள் பொழுது புலர்ந்தது. ஞாயிற்றின் இளங்கதிர்கள் தலை நீட்டுகின்றன. மரங்களில் இராமுழுவதும் வாயை மூடி இருந்த பறவைக்கூட்டம் இப்போது வாய் திறந்து கூவுகின்றது. காற்று தண்ணென வீசுகின்றது. கடல் அமைதியுற்று விளங்குகின்றது. முன்னுள் இரவு, கொலைக்களத்தை ஒத்திருந்தது கடல். இந்நாட் காலையிலோ ஒன்றும் அறியார்

போன்று ஒய்ந்திருக்கின்றது. கடற் பறவைகள் இங்கும் அங்கும் பறந்துகொண் டிருக்கின்றன.

கடற்கரையில் அவிழ்ந்த உடையுடன் இறந்தவனைப்போல் சாதுவன் கிடந்தான். அவனருகில், அவன் உயிர் பிழைப்பதற்குக் காரணமாயிருந்த மரத்துண்டு இருந்தது. சாதுவன் உடலெல்லாம் கடற்பாசி சுற்றிக்கொண்டிருந்தது. தலைமயிர் மணலில் புதையுண்டு கிடந்தது. வாய் மிக அழுத்தமாக மூடிக்கொண்டிருந்தது. மரச்சோலைகளில் காற்று வீசுதலாலுண்டாகும் ஒலி, சாதுவனை உறக்கத்தில் மேலும் ஆழ்த்தியது.

கதிரவன் வெளிப்படுகின்றான்; கதிர் சூடேறுகின்றது; உடலின் எங்கும் படுகின்றது; சூடு, உணர்ச்சியை உண்டாக்குகின்றது; சோர்வு சிறிது அகல, கண் விழிக்கின்றான்.

கப்பலில் மக்களோடு முன்னுளிருந்தவன் சாதுவன். இப்போது, அவன் கண்முன் மக்கள் யாரும் இல்லை. இதற்குமுன் பார்க்காத இடத்தினைக் காண்கின்றான். மணற்கரையில் அலைகளால் தான் ஒதுக்கப்பட்டிருத்தலை ஒருவாறு அறிகின்றான். கண்கள், நன்றாகத் திறந்து பார்க்கமுடியாத நிலையில் முன்னிருந்தன. இப்போது கூர்ந்து பார்க்கும் வன்மையைக் கண்கள் பெறுகின்றன. கடற்சங்குகள் அழகாக இட்ட கோலம் அவனுக்குக் காட்சி அளிக்கின்றது.

அலைகள் ஒதுக்கிய முத்துச் சிப்பிகளும் பவழங் களும் நிரை நிரையாகக் கிடக்கின்றன. சில்லை, உழுவல் முதலிய கடற்பறவைகள் பந்தி பந்தி யாகக் குந்திக்கொண்டிருக்கின்றன.

இவற்றையெல்லாம் கண்ட சாதுவனுக்கு நல்லுணர்வு தோன்றுகின்றது. அந்தோ! நான் உயிர் பிழைத்தது எதற்கு? உயிர் வாழும் மக்கள் யாரும் இங்கில்லையே! மக்கள் வாழாத இத் தீவில் நைந்து உயிரை விடவோ? என்னு டன் கலத்தில் வந்தோர் யாருக்கும், கடல், உயிர் வழங்கவில்லைபோலும்! அவர்கள் நல்லவர்கள் போலும்! அவர்களை அலைத்துப் பட்டினி போட்டுக் கொல்லக் கடலுக்கும் எண்ணம் இல்லை. தீச்செயலையே செய்து உழன்ற கொடுமையாளனாகிய என்னைப் பசியானது பற் றித் தீய்த்துக் கொல்லட்டும் என்பது இதன் கருத்தோ!' என்று புலம்பி மனமுடைந்தான்.

துன்பம் உச்ச நிலையை அடைகின்றது. ஆதிரையைப்பற்றிய எண்ணங்கள் பல எழுந் தன. "ஆதிரை; ஆதிரை!! அன்பிற்குரிய ஆதிரை!! குற்றம் பொருத்த குணமணியே! உன்னை முன்னும் பிரிந்தேன்! இன்றும் பிரிந் தேன்! இப்பிரிவு பெரும்பிரிவாய்விடுமோ? யான் நின் வாழ்வைப் பாழ்படுத்தினேனே! என்னைக் கொழுநனாக அடைந்தமையாலன்றோ

இவ்வாறு துயருறுகின்றாய்! நின் பெருமையை இப்போதன்றோ முழுதும் உணர்கின்றேன்! நின்னுடன் இனியேனும் இல்லறத்தைச் சீர் பெற நடத்தி மகிழலாம் என எண்ணியிருந் தேனே! ஆனால், தீவினை என்னைத் தடுக்கின்றது. ஐயோ! இனி, ஆகும் என்னிலைமையை எண்ணும்போதே நெஞ்சம் பகீர் என்கிறது. மக்கள் வாழாத இந் நிலப் பகுதியில் எறியப் பட்டேன். இனி, உணர்வற்று, என் உயிர் இவ் வுடலைவிட்டு அகலுவது உறுதி. கற்புடைய நின் மனம் நோக உன்னைவிட்டு நீங்கிக் காலம் கழித்தேன். அதனால் உண்டாகிய தீவினையே என்னை இக் கொடுமையாகிய சாதலுக்கு உட் படுத்துகின்றதுபோலும்! ஆதிரை, உனக்கு நான் பழி இழைத்தவனானேன். என்னை நீ மன்னிக்க வேண்டும். இன்றேல் செல்லும் உல கத்து நற்கதி இல்லை," என்று வாய்விட்டு அலறி அலறிச் செயலழிந்தான்.

4. கற்பின் வெற்றி

சாதுவனைப்போலவே உயிர் உய்ந்தோர் சிலர். அவர் நல்வினை வயத்தால் காவிரிப்பூம் பட்டினத்துக் கரையில் ஒதுக்கப்பட்டனர். கப்பலில் சென்றார், இக்கதியில் வந்தனரே என்று யாவரும் கடற்கரையில் கூடினர்.

சென்றோர் அனைவரும் காணப்படவில்லை. சிலரே சேர்ந்தனர். உயிர் பிழைத்து வந்தோர் பட்டினத்தார்க்கு நடந்தவற்றைக் கூறினர். சாதுவனை அறியாதார் அப்பட்டினத்தில் இல்லை. ஆதலின், அவனைப்பற்றி வினாக்கள் பல கேட்டனர். சாதுவன் மலைநாட்டில் ஒதுக்கப்பட்டமையை அவர் அறியார். ஆதலின், 'அவனைக் கடல் கொண்டது,' என்று கூறி வருந்தினர். சாதுவன் இறந்தான் எனக் கேட்டு "ஐயோ!" என யாவரும் வருந்தினர்.

"ஆதிரையிடம் சென்று இதனை எவ்வாறு கூறுவது? அந் நங்கை எவ்வாறு வருந்துவளோ? இக்கடுஞ் சொற்களையோ யாம் சென்று கூறல்வேண்டும்," என்று யாவரும் கருதினர்.

"சாதுவன் கடலில் கலம் உடைய இறந்தான்," என்பதைக் கற்பரசியாகிய ஆதிரை அறிந்ததுதான் நேரம்! 'ஆ' என்று அலறி அடியற்ற மரம்போல் நிலமிசை வீழ்ந்தாள். உடல், 'கிடுகிடு' என நடுங்கத்தொடங்கியது. உயிர் ஓய்ந்த பிணமேபோலாயினள். சிறிது நேரம் கழிந்தது. உணர்வு சிறிது தோன்றக், கண்களில் நீர் தாரை தாரையாக வழிந்தது.

"காவிரிப்பூம் பட்டினத்து உற்றார்களே! உடன்பிறந்த உயர்ந்தோர்களே! என் கொழுநர் மாய்ந்தார்! என்னுயிர் அவரே; யான்

அவர் உடல் போன்றவள். உயிரின்றி உடல் இயங்குமோ! அன்புகூர்ந்து நீங்கள் ஈமத்தில் எனக்கு எரி வளர்த்து உதவவேண்டும். அதன் கண் இந்த உடற்சுமையை நான் உடனே கழித்துவிட வேண்டும்,'' என்று அங்கு நின்ற அனைவரையும் கைகுவித்து வேண்டிக்கொண்டாள்.

பட்டினத்து மக்கள், வேறு செயலில்லாதவராயினர். ஆதிரைக்கென்று ஈமத்தில் எரி வளர்க்கப்பட்டது. அவள் புதிய ஆடை உடுத்துச் சாந்தம் உடலில் அப்பிக் கூந்தலில் மாலை சூடித் தீயினை வலம்வந்தாள். "என் கணவனுயிர் வினைவழி எங்குச் சென்றதோ, அங்கு என் னுயிரும் செல்க,'' என்று கூறினள். என்றும் மறவாத சாதுவன் நினைவோடு அவள் நெருப்பில் வீழ்ந்தனள்.

என்ன விந்தை! ஆதிரை ஈமத்தேறி இனிதிருந்தனள். நெருப்பு அவளைச் சுடவில்லை. உடுத்திருந்த கூறை எரியால் பற்றப்படவில்லை. பூசிய சாந்தம் சிறிதுங் கருகவில்லை. சூடிய நறுமலர் புத்தொளிபெற்றுத் திகழ்ந்தது, தீ தண்ணெனக் குளிர்ந்து நின்றது. "ஐயோ, நான் என்ன செய்வேன்! கணவனுலும் முன்னர் ஒதுக்கப்பட்டேன்! இன்று தீயும் என்னைக் கொல்லவில்லையே! தீயும் கொல்லாத்

தீவினை செய்தவளோ யான்! எரியும் நெருப்புமா என்னை வெறுக்கவேண்டும்!" என்று ஆதிரைக்கு வருத்தமே மேலிடுவதாயிற்று.

அப்போது அனைவரும் வியக்க வான்நிழல் ஒன்று தோன்றி, "ஆதிரை! கேள். நின் கண்ணனையான் இறக்கவில்லை! நின் கற்பு அவனைக் காத்தது! கடலில் ஒடிமரம் ஒன்று பற்றி நீந்திக் கரை சேர்ந்திருக்கின்றனன்! இன்று நாகர் எனும் ஒரு சாரார் வாழும் தீவில் இருக்கின்றான்! அங்கே நெடுநாள் தங்கியிருக்க மாட்டான்! சந்திரதத்தன் என்பவனது கலத்தில் விரைவில் வந்து சேர்வான்! நீ நின் துன்பம் நீங்கி நலமுற வாழ்வாய்," என்று கூறியது.

ஆதிரை அழுதுயர் நீங்கினாள். நன்னீர்ப் பொய்கையிலிருந்து நீராடி வருவார்போன்று நெருப்பினின்றும் வெளிவந்தாள். மனக் கவலையை விடுத்து மனையகம் புகுந்து 'என் உயிர்த்தலைவன் விரைந்து வருக' என்னும் நினைவோடு அமைந்திருந்தனள். கற்புடைப் பெண்டிர் அனைவரும் இவள் மாட்சிமை கண்டு வியந்தனர்.

5. தாய்மொழி அன்பு

சாதுவன் கிடந்த தீவில் அவனை அந் நாட்டு மக்கள் கண்டனர்; அவர்கள் நாகர்

எனப்படுவோராவர். அவர்களுக்குப் பாம்பின் இலச்சினை உண்டு. அதனால் அவர்களுக்கு 'நாகர்' என்னும் பெயர் உண்டாயிற்று. அவர்களுக்கு உடை இன்றி வாழும் இயல்பினராதலால் 'நக்கர்' என்றும் ஒருபெயர் உண்டு. என்ன கொடுமை! அவர்கள், உயிருடன் மக்களைக் கொன்றுண்பது வழக்கமாயிருந்தது. வேறு பல கொடிய வழக்கங்களும் அவரிடம் இருந்தன.

இவருள் சாரணர் என்பார் ஒருவகையினர். நக்கர்களுக்கு அரசனேபோல் தலைவனாய் விளங்கியவன் குருமகன் என்பான். இக் குருமகனுக்குச் சாரணர் ஒற்றர் தொழில் புரிந்திருந்தனர். இச் சாரணர் கடலருகிற் கிடந்த சாதுவனைக் கண்டனர். கலம் உடைந்தமையால் அவன் கரை சார்ந்தவன் என ஊகித்தனர். அவன் துன்பத்தை நீக்க ஒரே வழி கருதினர். கொன்று தின்றலே அவர்கள் கருதிய சுருக்கமான வழி! கொன்றவுடன் சாதுவன் துன்பம் ஒழியும்! தின்றவுடன் இவர்கள் பசி நீங்கும்!

நாகருடைய தீக்குணங்களை எவ்வாறெடுத்துச் சொல்வது! 'ஊனைத் தின்று ஊனைப் பெருக்காமை முன்னினிதே' என்றனர் அறிஞர். 'ஊன் ஊண் துறமின்' என்றூர் முடிதுறந்த

இளங்கோ. "புலாலுண்ணுதலே ஏனை எல்லாப் பொருந்தாச் செயல்களுக்கும் வாயில். மக்களைக் கொன்று தின்னலினுங் கேடு பயக்கும் தீவினை யாதுளது?

'உணவு இவன் நமக்கு,' என எண்ணிய நாகர் சாதுவனைச் சுற்றிக்கொண்டனர்; துயிலி னின்றும் எழுப்பினர். எழுப்புகின்றவர் நோக்கம் தன்னைக் கொல்லுதல் என்பதை அவர் முகத்தாலும் செயலாலும் சாதுவன் அறிந் தான். நமன் பல உருவங்களில் வந்ததைப் போன்ற சாரணர்களைக் கண்டதும், சாதுவ னுக்கு உள்ளம் எவ்வாறிருக்கும்? இன்னும் அவன் துன்பத்துக்கு வேறு என்ன வேண்டும்? திடுக்கிட்டு நெஞ்சு புண்ணாகப் பின், 'ஏன் என்னைக் கொல்லுதற்குச் சூழ்கின்றீர்?' என்று அவர்களை வினவினான்.

என்ன வியப்பு! சாதுவன் அவ்வாறு கேட்டவுடன் சாரணர்கள் தமது கொலை முகம் மாறி வியப்பெய்தினர். அவர்கள் கையிலிருந்த கொலைக் கருவிகள் அவர்களை அறியாமலே நழுவின.

இத்தகைய மாறுதல் அவர்களிடம் தோன்றியதேன்? சாதுவன் சில சொற்களைச் சொன்னான். அச் சொற்களே அம் மாறுதலுக்குக் காரணம்! ஆம், அதுவே! எவ்வாறு? சாது

வன் நாகருடைய தாய்மொழியில் பேசினன். சாதுவன் அவர் மொழியை அறிந்திருந்தானதலின் அம் மொழியில் கேட்க நேர்ந்தது. அதுவே சாரணர்களுக்கு வியப்பைவிளைத்துச் சாதுவனுக்கு அவன் உயிரைத்தந்தது!

இவ்வுண்மையை, மாணவர்களாகிய நீங்கள் நன்றாக அறிந்துகொள்ளவேண்டும். நாகர், மனிதனைக் கொன்றுண்ணும் கொடியோர்; அவர்கள் தம் தாய் மொழியில் வைத்திருக்கும் அன்பினை உன்னுங்கள். நாகரிக மற்று விலங்கினை ஒத்துவாழும் இவர்களுக்கே தாய்மொழியில் அழுந்தி நிற்கும் பற்று இத்தகைத்து என்றால், நாகரிகம் மிகுந்து மனிதர்களாக வாழும் நமக்கு நமது தாய்மொழியில் எவ்வளவு பற்று இருக்கவேண்டும்! தாய் மொழிப் பற்றில்லாதவன் மக்கள் இனத்தில் சேர்த்தெண்ணும் தகுதி உடையவனல்லன். நீங்கள் நும் தாய்மொழியில் உண்மை அன்புடையவர்களாக விளங்குகின்றீர்கள் அல்லவா?

நாகர் கொலைப்படையைக் கீழ் வீழ்த்தினர். சுற்றிலும் நிற்றலைவிட்டு விலகி ஒருபுடை ஒதுங்கி நின்றனர். கைகூப்பி வணங்கினர். "பெருந்திறலோய்! எம் குருமகன்பால் வரல் வேண்டும். ஈதெம் வேண்டுகோள்," என்று கூறி மீண்டும் தலைவணங்கினர். அவர்கள் வழி

காட்டி முன் செல்லப் பின் சாதுவன் தொடர லுற்ருன்.

சிறிதுதூரம் நடந்தவுடன் சாதுவனுக்கு ஒரு காட்சி தோன்றியது. அக் காட்சியின்

சிறப்பே சிறப்பு! அதற்கு உவமையாகக் கூற இவ்வுலகத்தில் வேருென்றும் இல்லை. வெள்ளிய

எலும்புகள் மலைபோல் குவிந்திருக்கின்றன. இம்மலையை இருக்கையாகக்கொண்டு அதன் மீது அவர்தம் குருமகன் என்போன் உட்கார்ந்திருந்தனன். அவன் உடல் முழுவதும் மயிர் அடர்ந்து வளர்ந்து தொங்கிக்கொண்டிருந்தது. அவன் பார்வையில் கரடியாகவே காணப்பட்டான். அவனருகில் அவன் இல்லக்கிழத்தி இருந்தனள். அத் தோற்றம், ஆண் கரடியும் பெண் கரடியும் ஒருங்கே உட்கார்ந்திருப்பதை ஒத்திருந்தது. அவர்களுக்கு அருகில் கட்குடங்கள் பல வரிசையாக அடுக்கப்பட்டிருந்தன. சுடப்பட்ட ஊன் துண்டுகளும் மலைபோல் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. புலால் நாற்றமும் கள் நாற்றமும் கலந்து சாதுவனுக்கு விளைத்த துன்பத்துக்கோ ஓர் அளவில்லை.

சாதுவன் குருமகன்முன் நின்றான். குருமகன், அவன் தமது தாய்மொழியை அறிந்திருக்கின்றான் என்பது தெரிந்து, அவன் அங்கு வர நேர்ந்தது எவ்வாறு என்று வினவினான். அலைகடல் உழந்தோன் தனக்கு நேர்ந்தவற்றை நவின்றான். நமது நாகர் மொழியில் அவன் மிகச் சுவையோடு பேசுதலறிந்து, குருமகனுக்குக் கண்களில் அருள் சுரந்தது. சாதுவன்பால் மிக்க அன்புடையவனாய், " இவன் கடல் கலக்க,

வருந்தியவன்! உணவும் இன்றி இருக்கின்றான். இவனுக்குப் புலாலையும் கள்ளையும் நிரம்பக் கொடுங்கள். பின் ஒரு மங்கையையும் மணம் செய்து வையுங்கள்," என்று கட்டளை இட்டான்.

குருமகனைக் கண்டதுமே திடுக்கிட்ட சாது வன்; இப்போது அவன் கூறிய சொற்களைக் கேட்டுப் பின்னும் அச்சம் அடைந்தான். 'இனி யேனும் நல்லறச் செயலில் ஈடுபடல் வேண்டும்,' என்ற துணிபுடனிருந்த சாதுவனுக்குக் குருமக னுடைய குறுஞ்சொற்கள் பெருந்துன்பம் உண் டாக்கின. எதிர்த்து ஏதேனும் சொல்லுவா னானால் அவன் உயிருக்கே தொல்லை நேரினும் நேரும். வாய்மூடி இருப்பின், கள்ளைக் குடித் துப் புலால் உண்ணவேண்டும். தன் கற்பரசி தன்னையே எண்ணி மனம் நொந்து பட்டினத் திருக்க, இங்கு ஓர் இளையாளுடன் கூடவேண் டும். இக் கொடுஞ்செயல்களை யெல்லாம் செய்தோ ஒருவன் உயிர்வாழவேண்டும்? அன்றி 'இவற்றில் ஈடுபடேன்,' எனக் கூறி மறுத்து, இறப்பதா? கொடுஞ்செயல்கள் செய்து சில நாள் உயிர் வாழ்தலினும், 'செய்யேன்,' என மறுத்து உயிர்விடுதல் உயர்ந்தது என்ற முடி வுக்கு வந்தனன்.

குருவே! நீவிர் என்பால் வைத்த அன் பால் சில கூறினீர்; மிக்க மகிழ்ச்சி அடைந்தேன்.

கள் குடித்தல் முதலிய கொடுஞ்செயல்களுக்கு யான் உடன்படேன். உயிர் உடலுடன் வாழு நாள் எந்நாள். அந்நாள்காறும் இத்தகைய கொடுஞ்செயல்களுக்கு யான் உடன்படேன்," என்று ஒரே துணிவாகக் கூறினான்.

குருமகனுக்குச் சிறிது சினக்குறிப்போடு வியப்பும் தோன்றியது. சாதுவன் அவ்வாறு கூறுதற்குரிய காரணம் யாதாயிருக்கலாம் என்று அறிய அவன் ஆவலுற்றான். ஆதலால் அக் குருமகன், "கள்ளையும் புலாலையும் தவிர மக்களுக்கு வேறு உண்டி உண்டோ? பெண்டிரில்லையேல் மக்கள் இன்பம் அடைவது எவ்வாறு?" என்று கேட்டனன்.

சாதுவன், "அன்பினீர்! கள்ளையும் கொலையையும் அறிஞர் அறவே நீக்கினர்.

"உறங்குவது போலும் சாக்காடு, உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு."

என்பது திருமறை. நாம் இறத்தல் தூங்குவதை ஒத்தது. மீண்டும் பிறத்தல், தூங்கி விழித்தலுக்கு நேர். உறங்கி விழிப்பதைப் போன்று இறந்து பிறக்கின்றோம். ஆதலின், பிறப்பும் இறப்பும் சுழன்று சுழன்று வந்து கொண்டே இருக்கின்றன.

"பிறந்தார் நல்லறம் செய்வாராயின், வீட்டுலகம் எய்துவர்; தீச்செயல் செய்யின் நரக

கத்தை அடைவர். ஒவ்வொருவனும் இறத்தல் உறுதி. இறக்குமுன் நல்லறம் செய்தல் வேண்டும். அதுதான் நல்லுலகுக்குக் கொண்டு போகும். தீச்செயல் நரகத்தில் சேர்க்கும். கள் குடித்தல், புலாலுண்ணல் முதலியவை தீச் செயல்கள். இவற்றைச் செய்வோர் நரகத்தை அடைந்து வருந்துவர். ஆதலின், இதைச் செய்தலாகாது!" என்றான்.

சாதுவன் சொற்கள் குருமகன் உள்ளத்தில் அமைதியை உண்டுபண்ணவில்லை. அவை அவன் இயற்கை வெகுளியைக் கிளர்ந்தெழச் செய்தன. ஆகலின், மிக்க சினத்தினனாய் இடி இடி எனப் பெருஞ் சிரிப்புச் சிரித்தான். சிரித்துப், "பெருந்துயருழந்தோய்! உடம்பை விட்டு நீங்கும் உயிர் உருவம் கொண்டு வேறிடம் புகும் என எமக் குரைத்தாய். உயிர் எவ்வாறு சென்று புகும்? அவ்வழியைச் செவ்வையாக எடுத்துரைப்பாயாக," என்றனன்.

குருமகன் கண்கள் வெகுளியால் செந்நிறம் அடைந்தன; சாதுவன் கண்டனன். "குருமகனே! வெகுண்டு உரையாடாதே: நீ சினத்துடனிருந்தால் யான் கூறுகின்ற உண்மைகளை அறியமாட்டாய். வெகுளியை விட்டுக் கேள். நின் வினவிற்கு விடை கூறுகின்றேன். உயிரோடு வாழும் நாம், நம் உடல் சிறு துன்பத்தை

அடைந்தாலும் அதனை உடனே அறிகின்றோம். பிணம், தீயில் இட்டுச் சுட்டப்படுங் காலத்தும் ஒன்றினையும் உணர்கின்றிலது. உணர்ச்சியைத் தரும் ஏதோ ஒன்று பிணத்தில் இல்லை என்பது உறுதியாக அறியப்படுகின்றது. அப்பொருள் யாது? அதுவே உயிர் என்பதாம்.

"உயிரிருந்த காலத்தில், உற்றதை உணர்ந்தது உடல். அஃதில்லாக் காலத்தில் பிணமாகிக் கிடக்கின்றது. ஒரு வீட்டில் குடி இருப்போர், அதிலிருந்து நீங்கினால், வேறிடத்தில் குடியிருந்தே தீர்வர். அவ்வாறே ஓர் உடம்பிலிருந்து உயிர் நீங்கியது என்றால், அது, வேறோர் உடலில் குடிவாழும் என்பது சொல்லாமலே அமையும்.

"இவ் வுண்மையை உறுதிப்படுத்த வேறொன்றும் கூறுகின்றேன். நாம் நனவை இழந்து உறங்குகின்றோம். அக்காலத்தில் கனாக் காண்கின்றோம். கனவு காணுங்கால், உயிர், உடம்பை ஓரிடத்தில் இட்டுப் பல கல் தூரம் சென்று பலவற்றைச் செய்துவருதலைக் காண்கின்றோம். இதனினும் சிறந்த சான்றும் ஒன்று உண்டோ? ஆதலின், செய்த வினைக்கேற்ப உயிர் உடலை அடைகின்றது. இதில் எள்ளளவும் ஐயம் கொள்ளவேண்டாம். இக் காரணத்தி

ஞாலேதான் அறிஞர்கள், கள் முதலியவற்றை வெறுத் தொதுக்கினர்."

சாதுவன் சொற்கள் வெள்ளிடையில் கொட்டிய பால்போல் வீணாகவில்லை. நற்பயன் அளித்தன. நாகன் தவறுள்ளத்தைத் திருத்தின. மேடும் பள்ளமுமாய அவன் உள்ளம் ஒழுங்காயிற்று. அவனுக்கு உண்மை அறிவு உண்டாயிற்று. ஆதலின், அவன்பால் மிகுந்து நின்ற சினம் உடனே அவிந்தது. உண்மை உணர்வு மிகமிகச் சாதுவனிடம் நன்மதிப்பும் மிகுந்தது. தன் என்பிருக்கையிலிருந்து இறங்கிக், கைகளைத் தலைமேல் கூப்பிய வண்ணமாகச் சாதுவன் அருகிற் சென்று, அடியற்ற நெடுமரம் போல் அவன் கால்களில் வீழ்ந்து வணங்கினன். எழுந்து நின்று வாய்மூடி, அடக்கத்துடன் கீழ்வருமாறு புகன்றன்.

"அறிஞர் ஏறே! பிறந்தநாள் தொடங்கிக் கள்ளையும் ஊனையுமே கைக்கொண்டிருக்கின்றேன். இவற்றை விட்டால், என் உயிரை ஓம்புதலாற்றேன். இன்று என் பிழைகளை உணர்ந்தேன். இன்று தொடங்கி, யான் என் குணம் குறிகளை மாற்றி அமைத்துக்கொள்வேன். ஆதலின், யாங்கள் பின்பற்றுதற்குரிய அறங்களை மேலும் எடுத்துரைத்தல் வேண்டும்."

சாதுவன் அகம் மகிழ்ந்து, "நாகர் தலைவரே! நன்று சொன்னீர். நீடூழி வாழ்வீராக! திருந்திய இவ்வறிவு என்றும் நிலைக்க! உம்மால் செய்யத்தக்க நல்லறம் கூறுவேன்.

"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வா யெல்லாம் செயல்"

என்பது தமிழ் முதுமொழி. "ஒவ்வொருவனும் தன்னாலியன்ற அறத்தை எப்போதும் எங்கும் செய்தல் வேண்டும்," என்பது கருத்து. என்னை யொத்துக் கலம் உடைந்தோ, கலம் கவிழ்ந்தோ, கரை சேருவோரைக் காப்பாற்றல்வேண்டும். அவரைக்கொன்று உண்ணல் மிக்க மறச்செயல். எல்லா மக்களிடத்தும் அன்புடையவராக இருத்தல்வேண்டும். இங்ஙனமே விலங்குகள் முதலிய எல்லா உயிர்கள்மாட்டும் அருள் நிறைந்து விளங்குதலொன்றே நீங்கள் செய்தற்குரியது," என்றான்.

குருமகன் கண்கள் மகிழ்வால் பொலிந்தன. "எங்களிடத்தில் ஆண்டவன் அருள்வைத்தே உம்மை எம் பக்கல் அனுப்பியுள்ளான். எமக்கு ஆகும் பேரறம் உரைத்த உமக்கு, யாம் செய்யத் தகும் கைம்மாறு யாதிருக்கின்றது? நீவிர், கைம் மாறு வேண்டாக் கடப்பாட்டினீர். ஆயினும் யான் கூறும் ஒன்றினை மறுது ஏற்கவேண்டும். முன்னெல்லாம் கலம் கவிழ்ந்த மக்களை உண்

டோம். அவர்தம் பொருள்கள் இங்கிருக்கின்றன. அன்றி, எம்மிடமும் விரைமரம், மென்துகில், விழுநிதி உள்ளன. இவற்றையும் கைக்கொள்ள வேண்டும்,” என்றுரைத்தனன். அவன் அன்பிற் கட்டுண்ட சாதுவன், வேண்டாம் என்று மறுக்கும் ஆற்றல் ஆற்றவனானான்.

6. ஆதிரை மகிழ்ச்சி

‘சந்திரதத்தன் வங்கத்தில் சாதுவன் வருவன்,’ என ஆதிரைக்கு வானிழல் வாயிலாக ஆண்டவன் முன் அருளினன். அவ்வணிகனின் கப்பல், நாகர் நாட்டுப் பக்கம் வந்தடைந்தது. முன்போல் மக்களைக் கொல்லும் வழக்கம் நாகரிடையில் இல்லை. ஆதலின், சந்திரதத்தன் கரைசார்ந்தனன். சாதுவன் இருத்தலை அறிந்தான். நாகர் தலைவனால் சிறப்பிக்கப்பட்ட வணிகன், சாதுவனையும் தன் கலத்தில் ஏற்றிக்கொண்டான்.

நாகரும், அவர் தலைவனும் சில ஆண்டுகள் சாதுவனுடன் வாழ்ந்து திருத்தமுற்ற வாழ்க்கையினராயினர். ஆதலின், அவனைப் பிரிதற்கு வருந்தினர். சாதுவனும், அவ்வாறே மனம் கசிந்தான். மனையாட்டியின் நினைவு ஒருபுறம் இழுத்தது; தனக்கு எக்குறையும் உண்டாகா வண்ணம் காப்பாற்றிவந்த நாகர் தலைவன் அன்

பும் மற்ருெருபுறம் இழுத்தது ; ஆதலின், ஊட்டிக்கொண்டிருந்த கன்றுக்கும் பிறந்த கன்றுக்கும் வருந்தும் ஒரு பசுவை ஒத்தான் சாதுவன்; கலம், கடல் நோக்கி நகரத் தொடங்கியது. நாகரது வாழ்த்தொலியும் அவர் பெருமூச்சும் கலந்து ஒலித்தன.

பட்டினத்தை நோக்கி விரைந்து வந்தது கலம். கரை சார்ந்ததும், சாதுவன் வந்துள்ளதை மக்கள் அறிந்தனர். வாணிப நெறியில் பொருளீட்டாவிடினும் அறநெறியில் நின்றமையால் அறக்கடவுள் மகிழ்ந்தளித்த பெரும்பொருளுடன் சாதுவன் வந்தமை தெரிந்து, யாவரும் மகிழ்ந்தனர்.

உறவினரும் நண்பரும் சூழச் சாதுவன் வீடுநோக்கிச் சென்ருன். கண்டனன் ஆதிரையை இல்லில்! அவள் கண்ணீர் ஊற்றையும் உள்ளத்துடிப்பினையும் கண்டனனு இல்லை. ஏன்? அவன் நிலையும் அவ்வாறே இருந்தது. உள்ளம் படபடத்தது, பிரிந்தவர் கூடினல் பேசவும் வேண்டுமோ? இருவரும் பேரன்பிற் சிறந்து, நெடுங்காலம் இனிது வாழ்ந்துவந்தனர்.

அருஞ்சொற் பொருள் விளக்கம்

[எண் பக்கத்தைக் குறிக்கும்.]

1. ஐம்பொறிகள்-மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன. அருளாளராக - அருள் என்ற குணம் நிறைந்தவராக.

2. அவாவினான் - விரும்பினான். உரையாடல் - பேசுதல்.

3. விழைந்தான் - ஆசையுற்றான். புரவலன் - அரசன். பொழுது புலரும் காலம் - காலை நேரம். சார்வர் - அடைவர்.

4. கவறாடல் - சூதாடல்.

5. கவறு-சூதாடற்குதவியாகக் கொள்ளும் காய். சட்டென - வேகமாக.

6. ஈய - கொடுத்ததற்காக. துலை-துலாக்கோல். பின்னவன்-தம்பி. இரப்போர் - யாசிப்போர். இடித்து-அறிவுவரும் வண்ணம்.

8. கலக்கம் - துன்பம். நுகர்ந்து-அநுபவித்து. கடியத்தக்கது-ஒதுக்கத்தக்கது.

9. அல்லல், தொல்லை - துன்பம். பணிந்தது - அடங்கியது.

10. ஈடேறாது - முற்றுப் பெறாது. அரசவை - அரசசபை.

11. உரைசி - தாக்கி. எதிருற்றன - எதிர்ப்பட்டன.

12. குருதி - இரத்தம். ஆற்றல் - வன்மை, பலம். அணி - சேனைகளின் வரிசை, ஆபரணம். கவரப்படல் - கைக்கொள்ளப் படல். பொருட்டன்று - பொருளன்று.

13. நலிகின்றனர் - வருந்துகின்றனர்.

14. பற்றும் - சேரும். ஊற்றாக - தோன்றுமிடமாக.

15. பசை - ஒட்டுந்தன்மை.

16. அலறினர்-வருந்திக் கூறினர். சீரியோர் - உயர்ந்தோர். வேல் - இங்கு அம்பைக் குறிக்கிறது. கருகினான் - வருந்தினான். மனம் உடைந்தான் - கவலையுற்றான். செந்நீர் - இரத்தம்.

17. விழுமியது - சிறந்தது. உரம் - வன்மை. மூதாதையர் - பல ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தோர். உருக்கம்-மன நெகிழ்ச்சி.

18. வலுப்பெறின் - பலம் பெற்றால். அறிவு மூடம் - அறியாமை.

19. மதித்தனர் - உயர்வாக எண்ணினர். கொடை மடம் - கேட்போர் எதைக் கேட்டாலும் இல்லை என்னாது கொடுக்கும் உயர்ந்த குணம். புலப்படுத்தி - கூறி. ஊர்தி - வாகனம். வண்டிப் பகடு - எருது. ஆனிரை - பசுக் கூட்டம்.

21. அறிமுகம் - அறிதல்.

23. விந்தை - ஆச்சரியம்.

24. குழுவினர் - கூட்டத்தினர். கூட்டுறவு - சேர்க்கை. கடுகி - வேகமாக.

25. வணக்கும் - வணங்கும்படி செய்யும்.

27. வடவர் - வடநாட்டிலுள்ளவர்.

29. கவலை - வருத்தம். செறிந்த - நிறைந்த. பொலிவு - விளக்கம். அருந்தினன் - குடித்தான். தமிழ் முப்பால் - திருக்குறள் எனும் அரிய நூல்; அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்று மூன்று பகுதியாயுள்ளது.

30. குழந்தை - கனிந்த.

31. மாட்சிமையுடன் - பெருமையுடன். சால - மிகுதியாக.

32. கிடங்கு - அகழி.

34. மடிமக்கள் - சோம்பல் எனும் தீய குணத்தினர். மிடிமக்கள்-வறுமையை உடையோர். கண்ணோட்டம் - கருணை.

35. ஞாயிறு-சூரியன். புத்தேளுலகம் - தேவருலகம். முதுமறை - பழமையாகிய வேதம்; திருக்குறள்.

36. அறவோர்-அறம் நிரம்பிய திருவள்ளுவர். முடங்கல் - கடிதம். தீட்டினன் - எழுதினன்.

37. புறங்காணல் - தோல்வியடையச் செய்தல். வெகுளி - கோபம்.

39. பல்கின - மிகுந்தன.

41. திகழவேண்டும் - விளங்கவேண்டும். தருக்கினன் - கர்வம் கொண்டனன்.

43. சூளுரை - வஞ்சினம். நொய்யர் - வன்மை இல்லாதவர். இயம்பினன் - கூறினன்.

44. தமிழ்மறை-தமிழ் வேதம்; திருக்குறள். இழுக்கலாகாது - குற்றம் அடைதலுதவாது.

45. வாகை-வெற்றிபெற்றோர் அணியும் மாலை. ஒளிவிடுகின்றது - பிரகாசிக்கின்றது. கொடுஞ்சி - தாமரை அரும்பு போன்று செய்து தேர்முன் வைக்கப்பட்டிருப்பது. மதித்து - எண்ணி.

46. போர் முகப்பு-போர் நடக்கும் முன்னிடம். மள்ளர் - வீரர். உலைந்து-துன்புற்று. மல்லனை-மற்போர் புரிபவனை. சிங்கக்குருளை - சிங்கக்குட்டி.

49. சான்று - சாட்சி. மாயா வாய்மொழி - எக்காலத்திலும் அழியாத உண்மை நிறைந்த மொழி.

50. திருமகள் - இலக்குமி. பொலிந்தவள் - விளங்கியவள்.

51. கணிகை - பொதுமகள். நிதிக்கொட்டில் - பொருள் நிறைந்த அறை; (பொக்கிஷசாலை.) இல்லக்கிழத்தி-மனைவி.

52. துண்ணென்றது - அஞ்சியது. மடமை - அறியாமை.

53. பொருளீட்டல் - பொருளைச் சம்பாதித்தல்.

54. நாவாய் - கப்பல்; கலம். ஒளிரும் - விளங்கும்.

55. இணையடி - இரண்டு திருவடிகள். மாய்ந்தது - நீங்கியது. குழுமின - கூடின.

58. கதிரவன் - சூரியன்.

59. சில்லை, உழுவல் - கடற்பறவைகள். உழன்ற - வருந்திய.

60. இழைத்தவன் - செய்தவன்.

62. ஈமம் - சுடுகாடு. சாந்தம்-சந்தனம். கூந்தல் - தலைமயிர். கூறை - சேலை.

63. வானிழல் - அசரீரி.

65. நழுவின - கீழ்வீழ்ந்தன.

66. உன்னுங்கள் - எண்ணுங்கள்.

67. தொடரலுற்றான் - தொடர்ந்து சென்றான்.

68. இருக்கை - சிம்மாசனம். நவின்றான் - கூறினான்.

69. குறுஞ்சொற்கள் - இழிந்த வார்த்தைகள்.

70. சுழன்று சுழன்று - மீண்டும் மீண்டும்.

74. மறச்செயல் - பாவச் செயல்.

75. விரை மரம் - சந்தனம். மென்றுகில் - மென்மையாகிய துணி. விழுநிதி-சிறந்த செல்வம். கசிந்தான் - துன்புற்றான்.

மேற்கோள் விளக்கம்

35. 'அழுக்காறு......விடும்' அழுக்காறு (பொறாமை) என்று சொல்லப்படுகின்ற மிகக் கொடிய பாவ குணமானது; தன்னை உடையவனது செல்வத்தை இவ்வுலகத்தில் கெடுத்து விடும்; மறுமைக்கண் நரகத்தில் செலுத்திவிடும்.

36. 'இளைதாக முள் மரம் கொல்க': முள்ளுடைய மரத்தை வளரவிடாது அதன் இளமைக் காலத்திலேயே நீக்கல்வேண்டும்.

44. 'நுண்ணிய...பிற': நுண்ணறிவு பெற்றிருக்கின்றோம் என்று எண்ணுகின்றவர், பிறரை அளக்குங்கோல் எது என்று ஆராயின் பிறருடைய கண்களே ஆகும்.

49. 'அழுக்காறு...என்பது': பொறாமைக் குணம் உடையார்க்கு வேறு பகைவர் வேண்டாம்; அத்தீய குணம் ஒன்றே போதுமானது: என் எனில் பகைவரால் அவருக்குத் துன்பம் நேராதொழியினும் இக் குணமே அவருக்குக் கேடு தருமாதலால்.

70. 'உறங்கு......—பிறப்பு'; சாதல் உறங்குவதை ஒத்தது; பிறப்பு உறங்கி மீண்டும் விழித்தலுக்குச் சமமாகும்.

74. 'ஒல்லும்...செயல்': அறச்செயலை முடிந்தவாற்றான், நீங்காது எப்போதும் அஃதெய்துமிடத்தானெல்லாம் செய்க.